# மக்கள் விசாரணை

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

ஆண்டு-6 இதழ்-12 மே -2018 மாதஇதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter




# குற்றங்களின் பிறப்பிடமாக மாறும் புழல்!



விளையாட்டுத் துறையில் சாதிக்க நினைக்கும் மாணவர்களுக்கும், வெளிநாட்டிற்கு சென்று விளையாடி சாதிக்க நினைக்கும் மாணவர்களுக்கும் பல்வேறு உதவிகள் மற்றும் பொதுநல சேவைகள் செய்து வரும் நாமக்கல் திரு. எம். சத்தியராஜ் அவர்களைப் பாராட்டி

யுனிவர் பிரஸ் மீடியா எஜூகேஷன் வித்யாபித் 'கௌரவ முனைவர் பட்டம்' வழங்கியுள்ளது.

மேன்மேலும் இவர் பல சேவைகள் புரிந்து வளர்ச்சியடைய மக்கள் விசாரணை வாழ்த்துகிறது.

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

## தமிழ்நாட்டைப் புறக்கணித்த மோடி!

சென்னை வந்த பிரதமருக்கு எதிரான போராட்டங்களுக்குக் கிடைத்திருக்கும் பரவலான ஆதரவும், சமூக வலைதளங்களில் ‘திரும்பிச் செல்லுங்கள் மோடி’ ஹேஷ்டேக் சர்வதேச அளவில் ட்ரெண்டிங் ஆக இருந்ததும், காவிரி விவகாரத்தில் மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு எதிரான தமிழகத்தின் உணர்வைப் பிரதிபலித்திருப்பதாகவே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. காவிரி தொடர்பாக ஒரு வார்த்தைகூட பிரதமர் பேசாமல் திரும்பிச்சென்றிருப்பது பெருத்த ஏமாற்றமாகவே இருக்கிறது.

அதையும்கூட உறுதிப்படுத்த மேலாண்மை வாரியம் அமைப்பதை மத்திய அரசு காலம் கடத்தும் நிலையில்தான் தமிழகத்தில் போராட்டங்கள் வெடித்திருக்கின்றன. மே 12 அன்று கர்நாடகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க மோடி அரசு ஏன் இழுத்தடிக்கிறது என்பது யாருக்கும் புரியாத ரகசியம் ஒன்றும் இல்லை.

காவிரி நதிநீர்ப் பகிர்வு தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்த இறுதித் தீர்ப்பை நிறைவேற்றுவதைத் தள்ளிப்போட்ட தற்கான பெரிய விலையை பாஜக அரசு தமிழகத்தில் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது.

கால் நூற்றாண்டு இழுபறிக்குப் பின் அளிக்கப்பட்ட தீர்ப்பு இது. இடைப்பட்ட காலத்திலேயே நிறைய இழந்து விட்டார்கள் தமிழக விவசாயிகள். இறுதித் தீர்ப்பு ஏற்கெனவே கிடைத்துவந்த தண்ணீரிலும் கொஞ்சம் குறைத்தது.

தேசியக் கட்சி என்ற அளவிலும் சரி; இந்நாட்டை ஆளும் கட்சி என்கிற நிலையிலும் சரி; பாஜக ஒரு போதும் செய்திருக்கக் கூடாத காரியம் இது. தமிழகத்தில் அடுத்தடுத்து போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கிய நிலையிலேனும் அக்கட்சி சுதாரித்திருக்க வேண்டும்.

போராட்டங்களை முன்னெடுப்பவை எதிர்க் கட்சிகளாக இருக்கலாம்; போராட்டங்கள் தமிழகத்தின் நலன் கருதி நடக்கின்றன, தமிழக மக்களின் உணர்வை அவை பிரதிபலிக்கின்றன. ஆள்பவர்கள் இதை உணர வேண்டும். மக்கள் குரலுக்கு காது கொடுக்காத ஆட்சியாளர்களுக்கு நேர்ந்த கதைகள் வரலாறு நெடுகிலும் கிடைக்கின்றன. அந்த வரலாற்றில்தான் தன் பெயரும் இடம்பெற வேண்டும் என்று நினைக்கிறாரா மோடி?

ஆனால், டெல்லியிலிருந்து இது சம்பந்தமாகப் பேசுபவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குரலில் பேசிவருகிறார்கள். பிரதமரோ தொடர்ந்து அமைதி காக்கிறார். உள்ளூர் பாஜகவினரோ போராட்டங்களைக் கொச்சைப்படுத்தும் விதமாகவே பேசி வருகிறார்கள். இந்நிலைத் தொடர்ந்தால் தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய நீதி கானல்நீர் ஆகிவிடும் என்பது உறுதி!

- ஆசிரியர்



# அம்பேத்கரின் நீராதாரக் கொள்கை என்ன சொல்கிறது?

மத்திய அரசின் அதிகாரத்தினுள் நதிகள் வர வேண்டும் என்று வாதிட்டவர் அம்பேத்கர் காவிரி நதி நீர்ப் பங்கீடு விவாதத்துக்கு உள்ளாகியிருக்கும் இன்றையச் சூழலில், இந்திய நீராதாரக் கொள்கை மற்றும் நதி நீர் மேலாண்மை குறித்து அம்பேத்கரின் பங்களிப்பை நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும். தத்துவம், சமூகவியல், பொருளியல், அரசியல் சட்டம், தொழிலாளர் நலன் என்று விரிந்து பரந்த அம்பேத்கரின் அறிவுசார் பங்களிப்பில் நீர் மேலாண்மையும் ஒன்று.

அம்பேத்கர் 1942-1946 ஆண்டுகளில் வைஸ்ராய் கவுன்சிலில் தொழிலாளர் நலன், பாசனம் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளுக்கு அமைச்சராக இருந்தார். அந்த நான்கு ஆண்டுகளில் அத்துறைகளில் அவர் செய்த சாதனைகள் இன்றைக்கும் நமக்கு வழிகாட்டுகின்றன.

தொழிலாளர் நலச் சட்டங்கள், இந்தியாவின் முதல் மின்சாரக் கொள்கை, இந்தியாவின் நீர்க் கொள்கை மற்றும் பெரிய நதிகளின் பன்முக பயன் திட்டங்கள் என்று பலவும் அவரின் முயற்சியால் அப்போது உருவாக்கப்பட்டன.

அம்பேத்கர் அமைச்சராக பதவியேற்கும் வரை இந்தியாவில் நீராதாரக் கொள்கை தெளிவாக இல்லை. தேவைப்படும் இடங்களில் அந்தந்த மாகாணங்கள் நீரைத் தேக்குவதற்கு அல்லது வெள்ளத் தடுப்புக்காக அணைகள் கட்டிக்கொண்டன. “மனிதன் நீரில்லாமையால் தான் பாதிப்படைகிறான், அதிக நீரினால் அல்ல” என்று ஒரு இடத்தில் குறிப்பிடும் அம்பேத்கர் தன்னுடைய இந்த எண்ணத்திற்கு வலு சேர்க்கும் விதமாக நீராதாரக் கொள்கையை வடிவமைத்தார்.

அம்பேத்கரின் நீராதாரக் கொள்கையானது ஆற்றுப் பள்ளத்தாக்கு வளர்ச்சி சார்ந்த பன்முகப் பயன்களை அளிக்கக்கூடிய நீர் மேலாண்மைத் திட்டங்கள், ஆற்றுப் பள்ளத்தாக்கு ஆணையங்கள் உருவாக்குதல், நீர் மேலாண்மை மற்றும் மின்சாரத் திட்டங்களை உருவாக்குவதற்கு வல்லுநர்களைக் கொண்ட தொழில்நுட்பக் குழுவினை அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இந்தக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக அதுவரையில் தொழில்நுட்ப ஆலோசகர்களை மட்டுமே கொண்டிருந்த அமைச்சரவையில், முதன் முதலாக இரண்டு தொழில்நுட்பக் குழுக்களை அமைத்தார். 1944-ல் மத்திய தொழில்நுட்ப மின்சார வாரியத்தையும் 1945-ல் மத்திய நீர்

வழி, பாசனம் மற்றும் நீர் வழிப் போக்குவரத்து ஆணையத்தையும் உருவாக்கினார். இந்தியா வின் தலைசிறந்த விஞ்ஞானிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட இந்த இரண்டு ஆணையங் களும் அப்போது மத்திய - மாநில அரசுகளுக்குத் தொழில்நுட்ப ஆலேசனைகளை வழங்கின. அவை இன்று முறையே மத்திய மின்சார ஆணையமாகவும் மத்திய நீர் ஆணையமாகவும் உருமாறியிருக்கின்றன.

நீரைச் சேமிக்கவும் வெள்ளத்தைத் தடுக்கவும் மட்டுமே ஒரு அணை கட்டுவது பயனற்றது என்று வலியுறுத்திய அம்பேத்கர், அந்தத் திட்டம் பாசனம், மின்சார உற்பத்தி மற்றும் நீர்வழிப் போக்குவரத்துக்குப் பயனளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவ்வாறு அவர் முதலில் எடுத்துக்கொண்ட திட்டம் தாமோதர் ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டம். பிகாரில் (தற்போது ஜார்கண்டில்) உற்பத்தியாகி வங்காளத்தில் ஹூக்ளி ஆற்றில் கலக்கும் இந்த நதி மழைக்காலங்களில் கடுமை யான சேதங்களை விளைவித்ததால் ‘வங்காளத் தின் துக்கம்’ என்று அழைக்கப்பட்டது.

இந்த நதியைக் கட்டுக்குள் கொண்டு வர ஆங்கிலேயர்கள் எடுத்த பல முயற்சிகள் தோல்வி யிலேயே முடிந்தன. பல தீர்வுகளை ஆழ்ந்து சிந்தித்த அம்பேத்கர், தாமோதர் திட்டத்தை அமெரிக்காவின் டென்னசி பள்ளத்தாக்குத் திட்டம் போன்று பெரிய அளவிற்கு உருவாக்கி னால் தான், அது பயனுள்ளதாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தார்.

ஒரே வருடத்தில் முழு தொழில்நுட்பத் திட்டமும் தயாரிக்கப்பட்டது. பிறகு இரண்டே வருடங்களில், ஒவ்வொரு மாகாணமும் எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட, மாகாணங்களுக்கிடையேயான அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு, அரசியல் சட்ட சபையில் அதற்கான சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி, தாமோதர் பள்ளத் தாக்கு ஆணையம் 1948-ல் உருவாக்கப்பட்டது. இன்றளவும் அது மிகப்பெரும் சாதனையாக விளங்குகிறது.

இந்தியாவில் பன்முகப் பயன்களைக் கொண்ட முதல் நதி நீர்த் திட்டம் தாமோதர் பள்ளத்தாக்கு ஆணையமே. தாமோதர் பள்ளத்தாக்கு ஆணையத்தின் கீழ் இன்று 5 அணைகள், 5 அனல் மின் நிலையங்கள், 3 நீர் மின் நிலையங்கள் இருக்கின்றன. மொத்தம் 2760 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படு கிறது. இந்தத் திட்டத்தினால் இரண்டு மாநிலங் களிலும் மொத்தம் 7 லட்சம் ஏக்கர்கள் பாசனம் பெறுகின்றன.

அதைத் தொடர்ந்து ஒரிசா அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மகாநதியில் ஹிராகுட் திட்டத்தையும், மத்திய பிரதேசத்தில் சோன் பள்ளத்தாக்கு திட்டத்தையும் உருவாக்கி னார். ஹிராகுட்டில் மார்ச் 1946ல் அணைக்கு அடிக்கல் நாட்டினார். துரதிர்ஷ்டவசமாக 1946-ன் பிற்பகுதியில் அவர் பதவி விலக நேர்ந்தது. அதனால் இந்தத் திட்டங்களில் பல தொய்வடைந்தன.

இந்திய அரசு சட்டம், 1935-ன் படி நீர் மேலாண்மை அதிகாரம் முற்றிலுமாக மாகா ணங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. நதிகள், மத்திய அரசின் அதிகாரத்தினுள் வரவேண்டும் என்று தொடர்ந்து வாதிட்டவர் அம்பேத்கர்.

பல்வேறு காரணங்களுக்காக ஒரு மாகாணம் தன் ஆளுகைக்குட்பட்ட இடத்தில் உருவாகும் நதியினை மற்ற மாகாணங்களுக்குப் பகிராமல் போகலாம் என்று அவர் கருதினார். சித்தார்த்தர் துறவறம் ஏற்று புத்தராக காரணமான ரோஹினி ஆறு பிரச்சனை அவர் கண் முன் விரிந்திருக் கலாம்.

இந்திய அரசியல் சட்டக் கூறு 262-ன் மூலம் நதி நீர்ப் பகிர்வு பிரச்சனைகளைத் தீர்க்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கியதோடு நிற்காமல், நதி நீர் குறித்து மாநிலங்களுக்கு இடையில் ஏற்படும் பிரச்சினையில் நீதிமன் றங்கள் தலையிடக்கூடாது என்ற தடையையும் ஏற்படுத்தினார் அம்பேத்கர்.

மத்திய அரசு மாநிலங்களுக்கிடையே ஓடும் நதிகளில் பொது நன்மைக்காக வளர்ச்சித் திட்டங்கள் கொண்டு வருவதற்கு ஏழாவது அட்டவணையில் மத்திய அரசு பட்டியலில் பொருள் 74-ஐ புகுத்தினார். ஆனால் அரசியல் சட்டத்தின் இந்தக் கூறுகளை மத்திய அரசு சரிவரப் பயன்படுத்தவில்லை என்பது துர திர்ஷ்டவசமானது.

**- வீ.சிவசங்கர்**

# அழிந்துவரும் கிராமங்கள்

மதுரை - திருச்சி தேசிய நெடுஞ்சாலைக்கு வலதுபுறம் சிட்டம்பட்டிக்கும் புதுத்தாம ரைப்பட்டிக்கும் இடையேயான வயல் பரப்பிற்குள் மறைந்து கிடக்கிறது இந்தக் கொட்டாங்குளம் கிராமம்.

போரால் அழிந்துபோன ஊரைப் போல காட்சி தருகிறது, கொட்டாங்குளம் கிராமம். வீடுகள் இடிந்து கருவேல மரங்கள் மண்டிக் கிடக்கின்றன. எஞ்சிய வீடுகளின் ஆயுசும் முடியப்போவதை கரையான் அரித்த உத்திரங் களும், பிரண்டைச்செடிகள் படர்ந்த கதவுகளும் முன்னறிவிக்கின்றன. வீதிகள் எல்லாம் தூர்ந்து போய்க் கிடக்கின்றன. நடைபாதையெங்கும் பரவியுள்ள புதரில், சரசரவென்று ஏதேதோ சிற்றினங்கள் ஊர, பாம்போ என்று பயம் வருகிறது. வீதிச் சந்திப்பில் இருந்த சின்டெக்ஸ் தொட்டி, தெருக்குழாய் போன்றவற்றை கருவேல மரங்கள் ஒளித்து வைத்திருக்கின்றன.

நம் காலடியில் நசுங்கும் சருகுச்சத்தம் கேட்டதும், கீரிப்பிள்ளையோ என்று பதறிச் சிதறுகின்றன நாட்டுக்கோழிகள். ஒவ்வொரு கிராமத்திலும் வேற்று ஆள் நுழைகையில், "யார் வீட்டுக்குப் போகணுப்பு?" என்று விசாரிப்பார் களே அப்படிப்பட்ட பெருசுகள் யாரும் இல்லை. சொல்லப்போனால், ஊரில் ஆட்களைத் தேட வேண்டியிருக்கிறது.

ஒரே ஒரு வீதியில் மட்டும் மனிதர்கள் வாழ்வதற்கான அடையாளங்கள் தென்பட்டன. இரண்டு ஜோடி மாடுகள், மோட்டார் சைக்கிள், கொடியில் காயும் துணிகள். ஏதோ ஒரு - மூலையில் விறகு வெட்டும் சத்தம். நெருங்கி னால், சீமைக்கருவை குச்சிகளை நறுக்கிக் கொண்டிருந்தார் தங்கப்பொண்ணு.

"என்னக்கா ஊர்ல ஆளையே காணோம்?" என்று கேட்டதுதான் தாமதம். "என்னமோ நேத்து வரைக்கும் ஆள் இருந்த மாதிரியும் திடீர்னு காணாமப் போன மாதிரியும்ல பேசுறீக. இந்த ஊர்ல மொத்தமே 4 குடும்பம்தான் இருக்கோம். அதுல பொண்டாட்டி பிள்ளைகளோட இருக்கிறது ரெண்டு பேருதான். ஒருத்தர் காசிநாதன் அண்ணே. இன்னொன்னு எங்க குடும்பம்" என்றார். ஆச்சரியம் என்னவென்றால், இவரும் இந்த ஊர்க்காரர் கிடையாது.

"அதெப்படி இந்த ஊரைத் தேடிப்பிடிச்சி குடியேறுனீங்க?"

"என் சொந்தவூரு தஞ்சாவூருப் பக்கம். மதுரை அயிலாங்குடி மாப்ளக்கு வாக்கப்பட் டேன். அவரு உடம்பு முடியாதவரு. சொந்த வீடும் கெடையாது. இந்த ஊர்லதான் வெறும் 300 ரூபாய்க்கு வாடகை வீடு கெடைச்சுது. இந்த ஊரு ரொம்பப் பிடிச்சிருக்கு தம்பி. ஆடு மாடு வாங்குனா மேய்ச்சலுக்குத் தொந்தரவில்லாத ஊரு. அப்புறம், என்னோட வறுமைய இளக் காரம் பண்றதுக்கு ஆளில்ல பாருங்க" என்று அவர் இயல்பாய் சொல்லிவிட்டார் நமக்குத் தான் ஒரு மாதிரியாகிவிட்டது.

இவரது மகள் செல்வி ஒன்றாம் வகுப்பு படிக்கிறாள். இந்த ஊரில் பள்ளிக்கூடம் இருந்து பள்ளிக்கூடம் போகிற ஒரே பிள்ளை இவள்தான். மக்கள் வசிக்கிற அந்தத் தெருவுக்குத் திரும்பியபோது, மாடுகளைக் கையில் பிடித்த படி ஒருவர் வந்தார். உள்ளூர்காரரர் என்று நினைத்தால், "என் பேரு உத்தமன். இந்த ஊருக்காரன்தான் ஆனா, ஒத்தக்கடையில குடியிருக்கேன்பா. வீடு, நஞ்சை, ரேஷன் கார்டு, ஓட்டர் ஐடி எல்லாம் இந்த ஊர்லதான் இருக் குது. ரொம்பப் பழமையான கிராமம் இது. ஒரு காலத்தில் அறுபது எழுபது குடும்பம் இருந்த ஊரு. அத்தனையும் விவசாயக் குடும்பம். இந்த ஊர்ல பாசனத்துக்குன்னு ஒரு கிணறோ, மழையில நிரம்புற கண்மாயோ கிடையாது.



பெரியாறு அணையில இருந்து கள்ளந்திரி வாய்க்கா வழியா தண்ணி வந்தாத்தான் உண்டு. முப்போகம் வெளஞ்ச ஊரு, ரெண்டு போகமாச்சு. கடைசியில ஒரு போகத்துக்கே வழியில்லாமப் போனதும், 1980கள்ல இருந்து ஒவ்வொரு குடும்பமா வெளியேற ஆரம்பிச்சாங்க. இப்ப மொத்தமே மூணு குடும்பம்தான் இருக்கோம்.

சிலர் மட்டும் வெளியூர்ல வசிச்சாலும், ரேஷன் கார்டையும், வாக்காளர் அட்டையையும் விடாப்பிடியா இந்த ஊர் பேர்லயே வெச்சிருந்தாங்க. ரேஷன் கார்டோட ஆதார் கார்டை இணைக்கச் சொன்ன பிறகு, அதுவும் ரத்தாகிப் போச்சு. கடைசித் தேர்தல்ல இந்த ஊர்ல 27 ஓட்டு பதிவாச்சு. பஞ்சாயத்துத் தேர்தல் வந்தாத்தான் இப்ப எத்தனை பேருக்கு ஓட்டு இருக்குதுன்னு தெரியும்" என்றார்.

"அதெப்படி ஒட்டுமொத்தமாக ஒரு கிராமமே ஊரைக்காலி பண்ணுனாங்க-?" என்று நாம் கேட்க,

"விவசாயம் பொய்ச்சதோடு, அரசாங்கமும் வஞ்சிச்சிருச்சி தம்பி. மதுரை மாட்டுத் தாவணியிலேருந்து 14 கல் (கி.மீ.) தூரம் தம்பி இந்த ஊரு. ஆனா, ரோடு வசதி கெடையாது. எங்க ஊரோட சேர்த்து பக்கத்து கிராமங்களான காயாம்பட்டி, காயாம்பட்டி மேடுன்னு மூணு ஊருக்கும் பஸ் இல்ல. பிள்ளைங்க பள்ளிக்கூடம் போக பஸ் இல்ல. கால்நடையாத்தான் போகணும்.

ராத்திரி ஏழு மணிக்கு மேல பொண்டு, பிள்ளைகளைப் பாதுகாப்பா கூட்டிட்டு வர்றதுக்கு ஒரு ஆம்பளை மெனக்கெட்டுப் போகணும். ரேஷன்ல அரிசி இலவசம். ஆனா, அதை வாங்கணும்னா சிட்டம்பட்டிக்கு ஆட்டோ பிடிச்சிப் போகணும். ரேஷன் கடை, ஆஸ்பத்திரி, பஸ் எல்லாமே ஓட்டு இருந்தாதானே நம்மூர்ல வரும்? எதுவுமே இல்லாத இடத்துல, இந்தக் காலத்துல யாருதான் குடியிருப்பாய்ங்க?" என்றார்.

இந்த ஊரில் கடந்த 10 ஆண்டுகளில் குழந்தை பிறப்போ, 30 ஆண்டுகளில் புது வீடு கட்டுதலோ நடக்கவில்லை. வெளியூரில் இறந்தவர்களின் உடல் அடக்கம் மட்டுமே உள்ளூரில் நடக்கிறது. கொட்டாங்குளம் கிராமம் அழிந்தே போய்விட, பக்கத்து கிராமங்களான காயாம்பட்டியும், காயாம்பட்டி மேடும் அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. காலி வீடுகள் அதிகரிப்பதைக் கலக்கத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

"500 ரேஷன் கார்டுகள் வந்தால், தனிக் கடை போடலாம் என்று அதிகாரிகள் சொல்லியிருந்தார்கள். ஆனால், 3 ஊர்களையும் சேர்த்தால்கூட, 200 வீடுகள் இல்லை. இந்த 3 ஊர்க்காரர்கள் ஒட்டுமொத்தமாக எதிர்த்து ஓட்டுப் போட்டாலும், சிட்டம்பட்டிக்காரரோ, வளர்ச்சியூர்க்காரோ ஊராட்சித் தலைவராகிவிட முடியும் என்பதால் இந்த ஊரைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள். பஞ்சாயத்து தலைவரே இப்படியென்றால், எம்பி, எம்எல்ஏக்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? ஒரே ஒரு ஆறுதல், நான்கு வழிச்சாலையோடு இந்த ஊர்களை இணைக்கும் வகையில் சமீபத்தில், மூர்த்தி எம்எல்ஏ காயாம்பட்டி வரையில் புதிதாகத் தார்ச்சாலை போட்டுக் கொடுத்திருக்கிறார். அப்படியே பஸ்சும் விட்டால் நல்லாயிருக்கும்" என்கிறார்கள் மக்கள்.

**மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டி ஒன்றியத்தில் வேளாம்பூர், மோதகம், புல்கட்டை என்ற 3 கிராமங்களும் அழிந்தே போய்விட்டன. அங்கு ஒருவர்கூட வசிக்கவில்லை. வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆவணங்கள் இந்த ஊர்ப்பெயர்களை குறிப்பிட்டு அடைப்புக் குறிக்குள் 'பேச்சில்லா கிராமங்கள்' என்று பதிவு செய்து வைத்திருக்கின்றன. அடுத்ததாக மேலும் மூன்று கிராமங்கள் 'பேச்சில்லாக் கிராமங்கள்' ஆகிக்கொண்டிருக்கின்றன.**

**- M.V. சங்கர்ராஜ்**

பல்கலைக்கழக முறைகேடுகளைத் கண்டித்து வரும் பேராசிரியர் மு.இராமசாமியைப் போன்ற கல்வியாளர்கள், பல்கலைக்கழக முறைகேடுகள் ஆய்வு மாணவர்களுக்கான மதிப்பீட்டு முறையிலிருந்தே தொடங்கிவிடுவ தாகத் தொடர்ந்து சுட்டிக்காட்டுவருகிறார்கள்.

உயர்கல்வித் துறை எவ்வளவு சீரழிந்து வருகிறது என்பதன் அறிகுறி. துணைவேந்தர் நியமனங்கள், பேராசிரியர் பணிநியமனங்கள், பதவி உயர்வுகள் என்று உயர்கல்வித் துறையின் உயர்மட்ட அளவில் மட்டும்தான் ஊழல்களும் முறைகேடுகளும் நடக்கின்றனபோலும்; மற்ற படி கல்வித் துறை அதன்போக்கில் சீராகத்தான் இயங்கிக்கொண்டிருக்கும் என்று ஒரு நம்பிக்கை இருந்தது. இப்போது அதுவும் தகர்ந்துவிட்டது.

புறமதிப்பீட்டாளருக்கான வழிச்செலவுகள் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டாலும் கூட ஆய்வு மாணவர்களும் மதிப்பீட்டாளருக் கான வழிச்செலவுகளை தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்ளும் கட்டாயம் நிலவுகிறது. ஆய்வு வழிகாட்டிகளும் அதற்கு உடன்படுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டு ஒருபுறமிருக்க, ஆய்வு வழிகாட்டியின் வீட்டில் ஆர்டர்லிகளைப் போல மாணவர்கள் நடத்தப்படும் கொடுமை யும் நடக்கிறது. ஒரு உதவிப் பேராசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பை முனைவர் பட்டம் வழங்கும் என்ற நம்பிக்கையில் இந்தக் கசப்பை வெளியே சொல்லாமல் விழுங்கிக்கொள்கிறார் கள் ஆய்வு மாணவர்கள்.

ஆய்வு மாணவர்கள் மட்டுமல்ல, கல்லூரி யில் அடியெடுத்துவைக்கும் ஒவ்வொரு மாண வரும் மாணவியும் சிக்கலுக்கு ஆளாகிறார்கள். மாணவர்களின் தேர்வுச் சுமைகளை குறைக்கும் என்ற நல்லெண்ணத்தில் உருவாக்கப்பட்ட

# ஆர்டலிகளாகும் மாணவர்கள்



அகமதிப்பீட்டு முறையே, இப்போது மாணவர்களின் கழுத்தின்மேல்தொங்கும்கத்தியாக அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, மாணவிகளுக்கு!

பேராசிரியையின் தொலைபேசி உரையாடல் கல்வித் துறையில் நடந்துகொண்டிருக்கும் ஒரு இழிவை, பொதுவெளிக்குக் கொண்டுவந்திருக்கிறது. மற்றபடி, இந்தச் சம்பவத்தை விதிவிலக்கு என்று சொல்லிவிட முடியாது. வெளியில் சொல்லமுடியாத வெட்கம்தான் பலரை உண்மை களைப் பேசவிடாமல் தடுக்கிறது. அதுவே குற்றவாளிகள் தொடர்ந்து தவறுகளைச் செய்யவும் காரண மாக இருக்கிறது. மாணவிகளின் புகாரின்படி, கல்லூரியின்

மாண்பைக் கெடுத்திருக்கிறார் என்று முடிவெடுத்து அந்தப் பேராசிரியை இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். "விசாரணைக் குழுவை அமைத்திருக்கிறோம். தேர்வுகள் முடிந்ததும் விசாரணை தொடங்கும்" என்று பதிலளித்திருக்கிறது கல்லூரி நிர்வாகம். பொதுவெளியில் வராதிருந்தால் அது பெயரளவிலான விசாரணையாக நடந்துமுடிந்திருக்குமோ என்ற சந்தேகம் தான் எழுகிறது. இதற்கிடையே பெரும் பரபரப்புக்கிடையில் அந்தப் பேராசிரியை கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்னர், அமெரிக்காவில் மேற்படிப்பு படிக்கும் வழக்கறிஞர் ரயா சர்க்கார், இந்தியப் பல்கலைக்கழகங்களில் மாணவிகளைப் பாலியல்ரீதியாகத் துன்புறுத்திய பேராசிரியர்களின் பட்டியலை வெளியிட்டார். பாதிக்கப்பட்ட மாணவிகள், தங்களது அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பட்டியல் நீண்டது. சமூக வலைதளங்களில் இந்தக் குற்றச்சாட்டுகள் பலரால் பகிரப்பட்டன. சில குற்றச்சாட்டுகள், சட்டபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. சில குற்றச்சாட்டுகள் குறித்து சட்டரீதியாக எந்தப் புகாரும் இதுவரை அளிக்கப்படவில்லை.

"குற்றம்சாட்டும் பெண்கள் பாதிக்கப்பட வாய்ப்பு இருப்பதால், அவர்களின் பெயர் விவரங்களை வெளியிட மாட்டேன்" என்று அவர்களின் பெயர்களை வெளியிட மறுத்துவிட்டார் ரயா சர்க்கார். குற்றஞ்சாட்டப்பட்ட பேராசிரியர்களில் மிகச்சிலர் மட்டுமே அவற்றை மறுத்திருந்தார்கள். பெரும்பாலானவர்கள் வாய் திறக்கவேயில்லை.

எழுத்துபூர்வமாக எங்களுக்கு எந்தப் புகாரும் அளிக்கப்படவில்லை என்று சில கல்வி நிறுவனங்கள் கூறின. எனினும், அத்தவறைக் குறிப்பிட்ட பேராசிரியர்கள் மீண்டும் துணிய மாட்டார்கள் என்ற அளவில் இத்தகைய சமூக வலைதள இயக்கங்களுக்குப் பங்கு இருக்கிறது.

பல்கலைக்கழகங்களில் ஆய்வுப் படிப்புக்காகச் செல்லும் மாணவியர்கள், பெரும்பாலும் பேராசிரியைகளைத்தான் ஆய்வு வழிகாட்டிகளாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதற்கு வாய்ப்பில்லாதபோது, வழிகாட்டிக்காகக் காத்திருக்கிறார்கள். இல்லையென்றால் ஆய்வுப் படிப்பு ஆசையைத் துறந்துவிடுகிறார்கள். எனில், இந்தப் பிரச்சினையின் பின்னுள்ள அச்சத்தை நாம் புரிந்துகொள்ளலாம். முதுகலைப் பட்டம் பெறும் இந்திய மாணவர்கள் ஆய்வுகளில் ஆர்வம் செலுத்துவதில்லை என்று குறைபட்டுக் கொள்ளும் இந்திய உயர்கல்வித் துறை, இத்தகைய நடைமுறைக் கேவலங்களைக் களைவதில் அக்கறை செலுத்துவதில்லை.

ஆய்வு மாணவர்கள், தங்கள் வழிகாட்டிகளுக்குத் தேவையான புத்தகங்களைத் தன் சொந்தச் செலவில் வாங்கிக்கொடுக்க வேண்டும், அவர்கள் எழுதும் கட்டுரைகளுக்கான குறிப்புகளைத் தயாரித்துக்கொடுக்க வேண்டும். சில சமயங்களில் அவர்கள் பெயரில் வெளிவரும் முழுக் கட்டுரையையும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

சர்வதேச ஆய்விதழ்களில் கட்டுரை எழுதும் பெரும்பாலான பேராசிரியர்கள் மாணவர்களுடன் இணைந்தே கட்டுரை எழுதுகிறார்கள். உலகம் போற்றும் பேராசிரியர்கள், தங்கள் ஆய்வு நூலில் பங்களித்த மாணவர்களின் பட்டியலுக்கு சிறப்பிடம் கொடுக்கிறார்கள். ஆனால், இந்த ஆய்வுநெறியை இந்தியப் பேராசிரியர்களில் பெரும்பாலானவர்கள் பின்பற்றுவதில்லை என்பது வருத்தத்துக்குரியது.

அறிவுத் திருட்டு, உடல் உழைப்பு, பாலியல் துன்புறுத்தல்கள் என்று ஏற்கெனவே ஆய்வு மாணவர்கள் வஞ்சிக்கப்பட்டுவருகிறார்கள். இப்போது இளங்கலை, முதுகலை படிக்கும் மாணவர்களையும்கூட இந்தச் சீரழிவு நெருங்கிவருகிறது. அகமதிப்பீடு, மேற்படிப்புக்கான உதவித்தொகை என்று ஆசைகளைக் காட்டி மாணவர்களின் வாழ்க்கையைச் சீரழிப்பதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இதுபோன்ற முறைகேடுகளில் ஈடுபடும் கல்வித் துறை அதிகாரிகள் யார் என்பது வெளிவராதவரை, இதுதொடர்பான நடவடிக்கைகள் பலன் தராது.

**- D. ரவி**

# சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பது ஏன்?

குழந்தைகள் பாதுகாப்பு குறித்து குரல்கள் ஆங்காங்கே ஒலித்து வருகின்றன. சென்னையில் கடந்த ஆண்டு போரூரை சேர்ந்த 6 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு தஷ்வந்த் என்ற இளைஞரால் கொடூரமாக எரித்து கொல்லப்பட்டார். அப்போது, குழந்தைகள் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் செயல்பாடு இன்றி முடங்கியுள்ளதால் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக குழந்தைகள் நல ஆர்வலர் குற்றம்சாட்டி உள்ளார். ஜம்மு காஷ்மீர் மாநிலம், கதுவா மாவட்டத்தில் 8 வயது சிறுமி காவல்துறை சேர்ந்தவர்கள் உட்பட 8 பேரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல், தூத்துக்குடி, விழுப்புரம், வாழப்பாடி, அரியலூர் உட்பட குழந்தைகளுக்கு எதிராக தமிழகம் முழுவதும் பல கொடூர பாலியல் கொலைகள் நடந்துள்ளன. இவ்வாறு, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறும் போது அவை குறித்து விவாதங்கள் எழுந்தாலும் முழுமையான தீர்வு கிடைப்பதில்லை. இதற்கு காரணம், குழந்தைகள் மீதான குற்றங்களை தடுக்கும் அமைப்புகள் முறையாக செயல்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதன்படி, குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட குற்றங்களை தடுக்கும் பணிகளில் மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் ஈடுபடுவதில்லை.

இந்த ஆணையம்தான் குழந்தை களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோரை தண்டிக்கும் போக்சோ சட்டத்தை கண்காணிக்கும் அதிகாரம் உள்ளது. மேலும், இந்த ஆணையத்திற்கு யாரை வேண்டும் என்றாலும் சம்மன் அனுப்பி விசாரணை நடத்தும் அளவுக்கு அதிகாரம் உள்ளது. ஆனால், இத்தகைய அதிகாரம் கொண்ட ஆணையத்திற்கு வழக்கறிஞர் பிரிவு கூட இல்லை. இதேபோல், ஆவண காப்பகங்கள், உறுப்பினர்கள், தலைவரால் ஆய்வு மேற்கொள்ளப்படுவது என எந்த பணிகளும் நடைபெறுவதில்லை. இதுமட்டுமின்றி, இந்த ஆணையத்தின் தலைவருக்கு ஒரு உதவியாளர் கூட நியமிக்கப் படவில்லை. 60 பேர் பணியாற்ற வேண்டிய அலுவலகத்தில் 10க்கும் குறைவானவர்களே பணியாற்றி வருகின்றனர். இதனால், ஆணையம் பெயரளவுக்கு மட்டுமே





செயல்பட்டு வருகிறது.

கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வரும் மாநில குழந்தைகள் நல ஆணையத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் கோடிக்கணக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுமட்டுமின்றி, வழக்கறிஞர்கள் பிரிவு, ஆவண காப்பகம், தலைவர், உறுப்பினர்கள் பள்ளிகள், விடுதிகளில் தொடர் ஆய்வுகளை நடத்துவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால், அந்த மாநிலங்களில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறைந்து வருகின்றன.

தமிழகத்தில் மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் செயல்பாடுகள் முடங்கியுள்ளதால் குழந்தைகள் மீதான குற்றங்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதாக குழந்தைகள் நல ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதுகுறித்து குழந்தைகள் நல ஆர்வலர் தேவநேயன் கூறியதாவது:

மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் பெயரளவுக்கு செயல்பட்டு வருகிறது. சமூக பாதுகாப்பு துறையின் கீழ் செயல்பட்டு வரும் இந்த ஆணையம் தனித்து இயங்கும் சுதந்திர அமைப்பாக இருக்க வேண்டும். ஒரு துறையின் கீழ் செயல்படுவதால் போதிய நிதி ஒதுக்கீடு செய்வது, அலுவலகத்திற்கு உள்கட்டமைப்பு உள்ளிட்ட எந்த வசதிகளும் அரசு செய்து கொடுக்கவில்லை.இந்த ஆணையத்தின் மூலம், குற்றங்கள் நடைபெறும் முன்பு தடுக்க வேண்டும்.

ஆனால், இந்த ஆணையம் குற்றம் நடந்தவுடன் சென்று அதனை பெயரளவிற்கு ஆய்வு செய்யும் நிலையிலேயே உள்ளது. இந்த ஆணையத்தின் தலைவருக்கு ஒரு உதவியாளர் கூட இல்லை. இதனால், ஏதாவது குறிப்பு வேண்டும் என்றால் அவரே கையால் அடிக்க வேண்டிய நிலை உள்ளது, கூட்டரங்கு என எந்த வசதிகளும் இல்லை.

ஆணையத்தின் வழக்கறிஞர்கள் பிரிவு இல்லாததால் போரூர் சிறுமி கொலை குற்றவாளி தஷ்வந்த் பெயிலை எதிர்த்து ஆணையத்தால் மனு அளிக்க கூட முடியவில்லை. இவையனைத்தும் தமிழக அரசுக்கு குழந்தைகள் நலன் குறித்த புரிதல் இல்லாததையே காட்டுகிறது. காஷ்மீரில் நடந்தது போன்று தமிழகத்தில் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்றால் மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் மேம்படுத்துவது, சுதந்திரமான அமைப்பாக செயல்பட விடுவது, குழந்தைகளுக்கு பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகளை மேற்கொள்வது உள்ளிட்டற்றால் மட்டுமே முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

குழந்தைகள் மன நல மருத்துவர் ஜெயந்தினி கூறியதாவது:

பேஸ்புக், வாட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பெற்றோர் ஆண், பெண் குழந்தைகள் யாராக இருந்தாலும் புகைப்படங்களை பதிவேற்றம் செய்ய கூடாது. குழந்தைகளை தனியாக விட கூடாது. மிகவும் நெருக்க மானவர்களாக இருந்தால் கூட குழந்தைகளை அவர்களிடம் பார்த்துக்க சொல்லிவிட்டு வெளியே செல்வது கூடாது. மதிப்பெண்ணை தாண்டி வாழ்க்கையை கற்று கொடுக்க வேண்டும். பிறருடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க கற்று தர வேண்டும். குழந்தைகளை கண்காணித்து வளர்க்க வேண்டும். பெற்றோரின் சிறிய நடவடிக்கைகளை கூட குழந்தைகள் பார்த்து பின்பற்றுவார்கள். எனவே, பெற்றோர் தங்களது சிறிய நடவடிக்கைகளில் கூட கவனமாக இருக்க வேண்டும் என்றார்.

ஆணையத்தின் வழக்கறிஞர்கள் பிரிவு இல்லாததால் போரூர் சிறுமி கொலை குற்றவாளி தஷ்வந்த் பெயிலை எதிர்த்து ஆணையத்தால் மனு அளிக்க கூட முடியவில்லை. இவையனைத்தும் தமிழக அரசுக்கு குழந்தைகள் நலன் குறித்த புரிதல் இல்லாததையே காட்டுகிறது.

கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வரும் மாநில குழந்தைகள் நல ஆணையத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் கோடிக்கணக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வழக்கறிஞர்கள் பிரிவு, ஆவண காப்பகம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால், அந்த மாநிலங்களில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறைந்து வருகின்றன.

**– ராஜேந்திரன்**




# குற்றங்களின் பிறப்பிடமாக மாறும் புழல்!

சென்னை, புழல் சிறையின் வளாகத்தில், தண்டனை, விசாரணை மற்றும் மகளிர் என, 3 சிறைகள் உள்ளன. அவற்றில், 3,000 பேர் வரை அடைக்கும் வசதி உண்டு. இங்கு, எப்போதும், 2,500 கைதிகள் வரை இருப்பர்.

கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால், சிறைக்காவலர்கள் முதல், சில அதிகாரிகள் வரை உற்சாகமடைவர். ஏனெனில், இங்கு தான், கைதிகளுக்கு தேவைப்படும், எந்த சலுகைக்கும், அதிகாரிகள் கேட்கிற விலை, அப்படியே கிடைக்கும்.

அதன் எதிரொலியாக தான், போதைப் பொருள் கடத்தல் வழக்கில் சிக்கிய கைதியை, சிறை மாற்றாமல் இருக்க, 40 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய, பிச்சய்யா, 40, என்ற சிறை தலைமைக்காவலர், கடந்த மாதம், லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் சிக்கினார்.

திருந்த நினைக்கும் குற்றவாளிகள் கூட, சிறை அதிகாரிகளின் லஞ்ச பசிக்கு பலியாகி, திருந்த வழியின்றி, கைதேர்ந்த குற்றவாளிகளாக, வெளியேறும், கொடூரமும் அரங்கேறி வருகிறது.

'ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம்' என்பது போல், தங்களுக்கு தேவையான சலுகையை, முறைகேடாக பெற விரும்பும் கைதிகளால், சிறைக்காவலர் மற்றும் சில அதிகாரிகளின், 'விருப்பம்' நிறைவேறுகிறது.

புழலில், சிறை திறக்கப்பட்டது முதல் இதுவரை, கைதிகளிடம் மொபைல் போன்ற பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக, 300க்கும் மேற்பட்ட வழக்குகள், புழல் போலீசில் பதிவாகி உள்ளன. அவற்றில், கடந்த, 2016 - 17ல் மட்டும், 80க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அதாவது, மொபைல் போன் வைத்திருந்த தாக, வழக்கு பதிவு செய்யப்பட்ட கைதியை, புழல் போலீசார் மீண்டும் கைது செய்வதற்குள், அவர் தண்டனை காலம் முடிந்தோ அல்லது ஜாமின் கிடைத்தோ, விடுதலையாகி இருப்பார்.

சிறையில், மூன்றடுக்கு பாதுகாப்பு உள்ளதாக கூறப்படும் நிலையில், கைதிகளுக்கு, மொபைல் போன், கஞ்சா, போதை மாத்திரைகள், சிறைக்காவலர்கள் உதவியின்றி எப்படி கிடைக்கும் என்ற கேள்வி எழுகிறது.

ஒரு மாதத்திற்கு முன், பார்வையாளர் ஒருவர், இரண்டு கைதிக்கு கொண்டு சென்ற, 400 கிராம் கஞ்சா சிக்கியது.

புழல் போலீசார், அந்த கைதிகளிடம் விசாரித்ததில், தங்கள் பிளாக்கில் காவல் பணியில் ஈடுபடும், சிறைக்காவலர் ஒருவர் மூலம், தங்களுக்கு கிடைக்கும் என்றும்,

அதற்கான பணம், வெளியில் இருந்து, அவருக்கு சேர்ந்து விடும் என்றும் கூறினர்.

அந்த காவலரிடம் நடத்திய விசாரணையில், அவரது வங்கி கணக்கில், அவர் வாங்கும் சம்பளத்தை காட்டிலும், கூடுதலான பணம், பல்வேறு இடங்களில் இருந்து, 'கிரெடிட்' ஆகி இருந்தது தெரிய வந்தது.

அது எப்படி வந்தது என்று கேட்டபோது, 'நான், ஊரில் டிராவல்ஸ் நடத்துகிறேன்; அதன் மூலம் கிடைக்கும் வருவாயை, ஓட்டுனர்கள், வங்கியில் செலுத்துகின்றனர்' என, 'கதை' விட்டிருக்கிறார்.

இதையடுத்து, அவருக்கு, சிறை அதிகாரிகள், சம்பிரதாயமாக, 'மெமோ' மட்டும் கொடுத்தனர். அவர் வழக்கம் போல், 'பணியை' ஆர்வமாக செய்து வருகிறார். வி.ஐ.பி., கைதிகளை, மனு போடாமல், அவர்களது உறவினர்கள் மட்டுமல்ல; யார் வேண்டுமானாலும், அதிகாரிகள் அறையில் சந்திக்கலாம்.

அந்த சலுகைக்கான, 'சிறப்பு' சம்பந்தப்பட்டவர்களின், வங்கி கணக்குகளில் சேர்ந்துவிடும்.

அதே போல், சிறைக்கு வெளியில் இருந்து ஏற்பாடு செய்யப்படும், உயர்தர உணவு, மொபைல் போன் ஆகியவையும், தாராளமாக கிடைக்கிறது. 1,000 ரூபாய் மதிப்புள்ள, மிக சாதாரண போன், 5,000 ரூபாய்க்கு, கைதிகளுக்கு கிடைக்கிறது.

சமீபத்தில், 3 நாள், 'பரோலில்' வீட்டிற்கு சென்று, சிறைக்கு திரும்பிய கைதியிடம், புதிய காவலர் நடத்திய சோதனையில், 2 மொபைல் போன், 6 சிம் கார்டு, போதைக்கு பயன்படுத்தும், 'டார்ட்டன் வேல்யூம்-10' என்ற, 100க்கும் மேற்பட்ட, தூக்க மாத்திரைகள் சிக்கின.

வழக்கமான காவலர்கள், பணியில் இருந்திருந்தால், அவை எளிதாக சிறைக்குள் சென்றிருக்கும். இப்படி, அதிகாரிகளின் ஆசையால், சிறை முழுக்க லஞ்சம் நிரம்பி வழிவதால், திருந்த வேண்டிய சாதாரண கைதிகள், குற்ற நுட்பங்களை கற்று தேர்ந்த குற்றவாளிகளாக, வெளியேறுகின்றனர்.

சிறு திருட்டு வழக்கில், புழல் சிறைக்கு சென்ற கைதி, விடுதலைக்கு பின், திருமணம் செய்து கொண்டு, திருந்தி வாழ விரும்பினார். அதற்காக, சிறை அதிகாரி ஒருவரின் உதவியை நாடினார்.



அவரோ, 'நீ திருந்திட்டா, நாடு வல்லரசாகிடும்' என்று, நக்கலடித்தார். மேலும், அந்த கைதியை, பெரிய குற்றங்களில் ஈடுபட்ட, சீனியர் கைதியுடன் கோர்த்து விட்டார்.

இதையடுத்து, ஜூனியர் கைதி, சீனியரிடம், தொழில் கற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அடுத்த ஓரிரு மாதங்களில், சீனியர் கைதி விடுதலையாகி, திருந்தி வாழ நினைத்த, ஜூனியர் கைதியை, ஜாமினில் எடுத்து, தன் கூட்டாளி ஆக்கினார்.

இதையடுத்து, சென்னை, அண்ணா நகரில், 9 கிலோ தங்கம் கொள்ளையடித்த வழக்கில், அந்த ஜூனியர், பெரிய குற்றவாளியாக மீண்டும் சிறைக்கு சென்றது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, திருந்த நினைப்பவர்களையும், சந்தர்ப்ப சூழ்நிலையால் கைதிகளாக மாறுபவர்களையும் கூட, குற்றங்களை செய்வதில், கைதேர்ந்தவர்களாக மாற்றும் ஒரு, முழுமையான தொழில் கூடமாக, புழல் சிறை மாறிக் கொண்டிருக்கிறது என்பது, அதிர்ச்சியான உண்மை.

புழல் சிறையில் இருந்து குற்றங்கள் உருவாவதை தடுக்க, சிறைக்கான பொறுப்பில் உள்ள உயர் அதிகாரிகள் முதல், கடைநிலை காவலர்கள் வரை, அனைத்து தரப்பினரையும், கடைந்தெடுத்து, ஒழுக்கமான, நேர்மையானவர்களாக பார்த்து, பணியமர்த்த வேண்டும்.

அதையும் மீறி, கைதிகளுக்கு உதவும் ஊழியர்களை, கடுமையாக தண்டிக்க வேண்டும். மேலும், தற்போதைய சிறை அதிகாரிகள் மற்றும் சிறைக் காவலர்களின் வங்கி கணக்குகளை கண்காணித்து, நிர்வாக சீர்கேடுகளை கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- முனைவர் ஆ.மவுரியன்**

# நசுக்கப்படும் ஜனநாயகம்..?



இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் பேச்சுரிமையையும், தான் விரும்பும் கருத்தை தெரிவிக்கும் உரிமையையும் அடிப்படை உரிமைகளாக இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ளது. அதில் நியாயமான குறுக்கீடுகள் என்ற கட்டுப்பாட்டின் மூலம் மக்களின் கருத்துக்களை அரசு பறித்து வருகிறது.

மத்திய அரசின் செயல்பாட்டிற்கு எதிராக கருத்தியல் ரீதியாக இயங்கிய பல பத்திரிகையாளர்கள், முற் போக்காளர்கள் சமீப காலங் களில் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக, நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, எம்.எம். கல்புர்கி, கவுரி லங்கேஷ், சாந்தனு பவுனிக் உள்ளிட்டோர் மத்திய அரசின் செயல்பாட் டிற்கு எதிராகவும், மூடநம்பிக்கை மற்றும் பிரிவினைவாத கருத்துகளுக்கு எதிராக பேசிய தாலும், எழுதியதாலும் கொல்லப்பட்டனர்.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என புகழப்படும் பத்திரிகைத்துறை மீது சமீபகால மாக அதிக அளவிற்கு தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. கருத்துகளை கருத்துகளாக எதிர் கொள்ள வேண்டிய அரசு நிர்வாகம், வெறுப் புணர்வு அரசியலை வெளிப்படுத்துவது தான் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

பத்திரிகைத்துறையில் பணியாற்றும் பெண் களை மிக இழிவான சொற்களைக் கொண்டு பதிவிடும் தனிநபர் மீது அரசு நிர்வாகம் நடவடிக்கை எடுக்கத் தயக்கம் காட்டுவதன் பின்னணியில் இருப்பது என்ன என்ற கேள்வியை அவ்வளவு எளிதாக கடந்து செல்ல முடியாது. இத்துறையில் பணியாற்றுவதற்காக இந்தியா முழுவதும் லட்சக்கணக்கான பெண்கள் படித்து வருகின்றனர். அவர்களுக்கு இத்தகைய கருத்துகள் பெரும் அதிர்ச்சியையும், பயத்தையும் உருவாக்கியிருக்கும்.

இந்நிலையில் தான், இந்தியாவில் மத்திய அரசை விமர்சிக்கும் ஊடகங்கள் அச்சுறுத்தப் படுவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அமெரிக்க நாடாளுமன்றத்தில் மனித உரிமை மீறல் தொடர்பான ஆய்வறிக்கையை அந்நாட்டு வெளியுறவுத்துறை சமீபத்தில் தாக்கல் செய்தது.

அதில், ‘‘2014, ஜனவரி முதல் 2017, ஏப்ரல் வரை இந்தியாவில் 54 பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், 45 பேர் மீது தேசவிரோத வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. அரசை விமர்சித்த 3 செய்தி தொலைக்காட்சிகளும், 45 வலைதளங்களும் முடக்கப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. அரசின் கொள்கை களை விமர்சிப்போர் மீது அவமதிப்பு வழக்கு கள், செய்தி நிறுவனங்களில் சிபிஐ சோதனை, பல பத்திரிகையாளர்கள் கைது என்ற நெருக்கடி பத்திரிகைத்துறைக்கு ஏற்பட்டுள்ளது,’’ என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவில் பத்திரி கைகள் அனைத்தும் தணிக்கை செய்யப்பட்டே வெளியிடப்பட்டன. அரசிற்கு எதிராக கருத்து வெளியிட்ட பத்திரிகைகள் பல தடை செய்யப் பட்டன. அதன் ஆசிரியர்கள் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஆனால், சுதந்திர இந்தியாவிலும் அத்தகைய நடவடிக்கைகள் தொடர்வது ஜனநாயகத்திற்கு பேராபத்து. ‘இடிப்பாரைஇல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானுங் கெடும்’ என்ற திருக்குறளை ஆட்சியாளர்களுக்கு ஞாபகப் படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**- சரவணன்**

சென்னையில் மட்டும் வழக்கத்தை விட 6.5 டிகிரி வெப்பம் அதிகரித்து இருப்பதாக வானிலை ஆராய்ச்சி மையம் கணித்துள்ளது. 2016 டிசம்பரில் வர்தா புயல் தாக்கிய போது லட்சக்கணக்கான மரங்கள் சென்னையில் சாய்ந்தன. அதற்குப்பதில் மரங்கள் நடப்பட்டாலும், சென்னையின் பசுமை தொலைந்து போய்விட்டது. இப்போது உக்கிர மாய் உள்ள சூரியனின் வெப்பத்தில் அதில் வெட்ட வெளிச்சமாய் தெரிகிறது.

பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் தொடங்கிய வெயில் தொடர்ந்து அதிகரித்து இப்போது உக்கிரத்தை எட்டியுள்ளது. ஆண்டுக்கு ஆண்டு வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. அக்னி நட்சத்திரம் மே 4ல் தொடங்க உள்ளது. அதற்குள் தீயாய் தகிக்கிறது. சென்னை உள்பட 8 மாவட்டங்களில் இப்போதே வெயில் 100 டிகிரியை தாண்டிவிட்டது.

முடிந்தவரை பகல் 11 முதல் பிற்பகல் 3 மணி வரை வெளியே செல்ல வேண்டாம் என்று பொதுமக்களுக்கு வானிலை மையம் அறிவுறுத்தி இருக்கிறது. ஆனால் காலை 8 மணிக்கே சென்னை உள்ளிட்ட நகரங்களில் வெயில் சுட்டெரிக்கிறது.

இந்த நேரத்தில் பள்ளிக்கல்வித்துறையை பாராட்டியே ஆக வேண்டும். வெயில்தாக்கத்தை முன்கூட்டியே உணர்ந்து ஏப்ரல் 20ம் தேதி அனைத்து பள்ளிகளிலு கடைசி வேலை நாளாக அறிவிக்கப்பட்டு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

எப்போதும் ஏப்ரல் கடைசி தேதி வரை செயல்படும் தொடக்க பள்ளிகளுக்கு கூட இந்த ஆண்டு ஏப்ரல் 20ம் தேதியோடு விடுமுறை அளிக்கப்பட்டு விட்டது.

இத்தனை முன்னெச்சரிக்கை நடவடிக்கை கள் எடுத்தாலும், அவசர தேவை கருதி வெயிலில் செல்வோர், பணி நிமித்தம் செல்வோர், வயது முதிர்ந்தோர் உள்பட வெயிலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டால், அவர்கள் உடல் நலனை விரைவில் தேற்றும் வகையில் மருந்து மற்றும் உணவு பொருட்கள் இந்த நேரத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இருப்பு வைப்பது மட்டுமல்லாமல், வந்து செல்லும் அனைத்து நபர்களுக்கும் இலவசமாக விநியோகிக்கும் நடவடிக் கையை சுகாதாரத்துறை மேற்கொள்ள வேண்டும்.

அதே வேளையில் ஆறுகளில் மணல் அள்ளி அதன் வழித்தடத்தை உருக்குலைப்பது, மலைகளை உடைத்து பாறைகளாகவும், மணலாகவும் மாற்றுவது, விளைநிலங்களை பிளாட்டுகளாக மாற்றுவது, ஏரி மற்றும் குளங்களை காணாமல் செய்வது உள்ளிட்ட இயற்கையை அழிக்கும் வேலையை இனிமேலா வது அனைவரும் நிறுத்தி, பொதுமக்களும் அக்கறை உணர்வுடன் நடந்து கொண்டால் வெயிலின் தாக்கத்தை குறைக்கலாம்.

**- ராம்குமார்**





# இத்தனை ஆண்டுகளாக என்ன செய்தார் கமல்?

தமிழகம் முழுவதும் 12,524 கிராமப் பஞ்சாயத்துகளிலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மக்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் கொஞ்சநஞ்சமல்ல. அடிப்படைத் தேவைகளான குடிநீர், சுகாதாரம் தொடங்கி வாழ்வாதாரமான 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டங்கள் வரை ஸ்தம்பித்துள்ளன. ஏற்கெனவே, விவசாயமும் கைவிட்ட நிலையில் உள்ளாட்சி அமைப்புகளும் இல்லாததால் கிராமப் பொருளாதாரம் முற்றிலுமாக சிதைந்துப்போயுள்ளது. கிராமங்களில் அரசு திட்டப் பணிகள் முறையாக நடக்காததால் கிராமப்புற கூலித் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புகள் அழிந்துவிட்டன. மத்திய அரசின் 14-வது நிதி ஆணையத்தில் தமிழகத்துக்கு வர வேண்டிய நிதியும் பெற முடியவில்லை.

அரசியல்வாதி கமல்ஹாசன் மீது, 'பேச வேண்டிய முக்கியமான விஷயங்களை அவர் பேசுவதில்லை' என்பது உட்பட சில விமர்சனங்கள் உண்டு. ஆனால், சமகால அரசியல்வாதிகள் எவரும் செய்ய துணியாத, சொல்லப்போனால் அவர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்காத 'பஞ்சாயத்து ராஜ்ஜியம்' என்கிற தத்துவத்தை கமல்ஹாசன் இப்போது கையில் எடுத்திருக்கிறார். அந்த வகையில் அவரது அரசியல் பயணத்தில் மிகச் சரியான பாதையையே அவர் தேர்ந்தெடுத்துள்ளார் என்றே தோன்றுகிறது!

இந்நிலையில்தான் கடந்த ஏப்ரல் 24-ம் தேதி தமிழக அரசியல்வாதிகள் யாரும் செய்ய முன்வராத மாதிரி கிராம சபைக் கூட்டத்தை முன்னெடுத்து நடத்தியிருக்கிறார் கமல். உண்மையில் ஏப்ரல் 24-ல் இந்திய ஜனநாயகத்தின் வரலாற்றில் மறக்க முடியாத நாள். எப்படி என்பதை சுருக்கமாகப் பார்ப்போம்.

சுதந்திரத்துக்குப் பின்பு கிராம சுயராஜ்ஜியத்தை எப்படியாவது அரசியல் சாசன சட்டப் பாதுகாப்புடன் நிறைவேற்றிவிட வேண்டும் என துடித்தார் காந்தி. நேருவும் வல்லபாய் படேலும் ஆதிக்கம் செலுத்திய அந்த நாட்களில் காந்தியின் வார்த்தைகளுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்பது கசப்பான வரலாற்று உண்மை.

ஆனாலும் காந்தியின் தொடர்ந்த வலியுறுத்தலால், வேறுவழியில்லாமல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பாகம் 4-ல் 'மாநிலங்களின் உள்ளாட்சி களுக்கான வழிகாட்டுதல் குறிப்பு' என்கிற 40-வது சட்டப்பிரிவில் 'பஞ்சாயத்துகளை அமைத்தல்' என்கிற தலைப்பைப் புகுத்தினார்கள். அதிலும் நிறைய குளறுபடிகள். இடையே அதுவும் நீர்த்துப்போனது. அதன் பின்பு ராஜீவ்காந்தி இதை நிறைவேற்றுவதற்கு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டார். அவரது முயற்சியும் நிறைவேறவில்லை. ஒரு

வழியாக நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் இது நிறைவேறியது.

*1992*, டிசம்பர் *22*-ம் தேதி மக்களவையும் அதற்கு மறுநாள் மாநிலங்கள் அவையும் *73*-வது திருத்த மசோதாவை நிறைவேற்றின. *1993*, ஏப்ரல் *20*-ம் தேதி குடியரசுத் தலைவர் இந்த மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தார். *1993*, ஏப்ரல் *24*-ம் தேதி இந்தச் சட்டம் அமலுக்கு வந்தது.

அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து *25* ஆண்டுகள் கடந்துவிட்டன. சொல்லப் போனால் கடந்த ஏப்ரல் *24*-ம் தேதியன்று நாடு முழுவதும் பஞ்சாயத்து ராஜ்ஜியத்துக்கான




வெள்ளி விழாக்களை நடத்தியிருக்க வேண்டும். ஆனால், சம்பிரதாயத்துக்காகக் கூட இதற்கான விழாக்களோ சிறப்புக் கூட்டங்களோ இங்கு நடக்கவில்லை. மத்தியப்பிரதேசத்தில் நடந்த பஞ்சாயத்து ராஜ்ஜியம் மாநாட்டில் மோடி கலந்துகொண்டது மட்டுமே ஆறுதலான செய்தி.

குறிப்பாக, தமிழகத்தில் கடந்த *2016*, அக்டோபர் *24*-ம் தேதியுடன் உள்ளாட்சிகளின் பதவிக் காலம் நிறைவடைந்தது. மக்கள் பிரதி நிதித்துவச் சட்டப்படி உள்ளாட்சிப் பிரதிநிதி களின் பதவிக் காலம் முடிவடையும் முன்பே தேர்தல் நடத்தப்பட்டு, பதவிக் காலம் முடிந்த மறுநாள் புதியதாக தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பதவியேற்க வேண்டும். ஆனால், தமிழகத்தில் நிலவும் மலிவான அரசியல் சூழல் காரணமாக மாநில அரசு திட்டமிட்டே உள்ளாட்சித் தேர்தலை புறக்கணித்துவருகிறது.

“அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டிருக்க வேண்டும் என்கிற ஓயாத முயற்சியே சுயாட்சி. அந்த அரசாங்கம் வெளி நாட்டு அரசாங்கமாக இருந்தாலும் சரி, தேசிய அரசாங்கமாக இருந்தாலும் சரி. வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்துக்கும் மக்கள் அரசாங் கத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் சுதந்திர அரசாங்கம் என்பதும் வருந்தத் தக்கதாகிவிடும்” என்றார் காந்தி.

ஆனால், இன்றைய நாட்கள், காந்தியடிகள் வலியுறுத்திய அதிகார பரவலுக்கு நேர் எதிரான நாட்களாக அமைந்துவிட்டன. கடந்த *22* ஆண்டுகாலம் தடையின்றி ஓடிக்கொண் டிருந்த பஞ்சாயத்து சக்கரம் இன்று நிறுத்தப் பட்டிருக்கிறது.

உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான வழக்கு நிலுவையில் இருக்கிறது. எப்போது உள்ளாட்சித் தேர்தல் வரும் என்றே தெரியாத சூழல் நிலவுகிறது. திமுக, பாமக மற்றும் இடதுசாரி உள்ளிட்ட கட்சிகள் அவ்வப்போது அழுத்தம் கொடுத்தும், ஆளும் அரசு அசைவதாகத் தெரிய வில்லை. இந்தச் சூழலில்தான் பஞ்சாயத்து ராஜ்ஜியம் என்னும் உள்ளாட்சித் தத்துவத்தை கையில் எடுத்திருக்கிறார்.

குறிப்பாக, மாதிரி கிராம சபைக் கூட்டத்தில், அவர் பேசத் தொடங்கும்போதே ‘பங்கேற்பு ஜனநாயகம்’ குறித்து விரிவாகவும் அழுத்தம் திருத்தமாகவும் பேசியது உள்ளாட்சியின் மீது அவருக்கு உள்ள புரிதலை உணர்த்தியது.

“தற்போதைய நடைமுறை ஜனநாயகம் என்பது பிரதிநிதித்துவ ஜனநாயகமாக உள்ளது. நீங்கள் ஓட்டுப் போடுகிறீர்கள். உங்கள் பிரதிநிதி உங்களை ஆட்சி செய்கிறார். ஆனால், நீங்கள் வாக்களித்து நீங்களும் ஆட்சியில் பங்கு பெறுவதுதான் உள்ளாட்சி ஜனநாயகம். அது பங்கேற்பு ஜனநாயகம்.

அதாவது, உங்கள் ஊர் உங்கள் பொறுப்பு” என்ற வரிகளை கமல் ‘உள்ளாட்சி... உங்கள் உள்ளங்களின் ஆட்சி’ நூலில் படித்திருப்பார் என்றே நம்புகிறேன். அதேசமயம், கமல்ஹாசன் கிராம சபைக்கான விதையை அவரது நிர்வாக வசதிக்காக ஆழ்வார்பேட்டையில் விதைத்திருக் கலாம். ஆனால், அது கடைக்கோடி வரை சென்றடைய அவர் நேரடியாக பயணிக்க வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது!

இதுஒருபுறமிருக்க இத்தனை ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருந்தார் கமல் என்ற கேள்வியும் அதிகம் ஒலிக்கிறது.

**- முனைவர் ஆ.மவுரியன்**

# சிந்தனை முத்துக்கள்




## சிந்திப்பார்களா?

வறண்டு போன ஊரிலும் வளர்ந்து நிற்கிறது கட்சிக் கொடி மரங்கள்!
அரசியல்வாதியின் தும்மல் கூட எதிர்க் கட்சியின் சதி...
சராசரி மக்களின் கண்ணீர் கவனிப்பாரற்று போகிறது!
மக்களாட்சியின் மதிப்பை இங்கே மக்களே விற்பனை செய்கிறார்கள் சில ரூபாய் நோட்டுகளுக்காக!










பிய்யாத தோச வேணும்னு அவள்ட்ட கேட்டதும்..!அவளும் ஆசையா போட்டு தந்து..!

இப்ப பிய்க்காம திண்ணுனு *கரண்டியோட பக்கத்தில நிப்பா பாருங்க அவ தாங்க..?
பொண்டாட்டி..😋😊

இப்ப என்னடா பண்ணலாம்னு தோசையவே வெறிக்க வெறிக்க பாத்துட்டு இருப்பான் பாருங்க அவன் தான் the great புருஷன்..! 🤣😫😋😀😜









## நடக்குமா?

காவேரிக்காக போராடுவதை விட தமிழகத்தில் 10 அணைகள் கட்டுவதற்குப் போராடுங்கள்....

3 வருடத்தில் தமிழகத்தில் குடிநீர் கிடைக்கும், பல தலைமுறைகள் வாழ்த்தும்

## கௌப்பாறங்கடா பீதிய..

அடேய் பொதிகை சேனல்ல அரைமணிநேரம் செய்தி பாத்தப்போ சந்தோசமாதான்டா இருந்தோம்..! எப்ப இந்த தந்தி டிவி, புதிய தலைமுறை, நியூஸ்7 நீங்க வந்தீங்களோ உண்மையிலே நாட்டுல இவ்ளோ பிரச்சனை இருக்குமா இல்ல, நீங்களா உண்டாக்குறிங்களானு தெரியலடா..!




## உண்ணா விரதம்

மகாத்மா காந்தி நடத்திய அகிம்சா போராட்டத்தை காவிரிக்காக அதிகமு எடுத்துள்ளது - அமைச்சர்



காந்தி எப்பய்யா உண்ணாவிரதம்னு சொல்லி, பிரியாணியையும் சமோசாவையும் சைடுல போய் சாப்பிட்டு வந்தாரு?

## சந்தோஷம்

வீட்டில் ஸ்டவ் ரிப்பேரானா மனைவிக்கு சந்தோஷம்...

ஃப்ரிட்ஜ் ரிப்பேரானா கணவனுக்கு சந்தோஷம்..!

முனைவர் ஆ.மவுரியன்




# இராணி மங்கம்மாள் 7



பல மன்னர்கள் மதுரையை ஆண்டிருந் தாலும், அவர்களில் மிகவும் புகழ்பெற்று விளங்கியவர்கள், திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக்கர், ராணி மங்கம்மாள், விஜயரங்க சொக்கநாதர் ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள். பெண்கள் முடி சூட்டி ஆட்சி செய்யாத நாயக்கர் மரபில் காப்பாட் சியாளராக இருந்து மதுரையை ஆண்ட பெண்மணி ராணி மங்கம்மாள்.

தமிழகத்தின் சரித்திரத்தில் ஆட்சி செய்த பெண் அரசிகள் என்றால் மிகச் சிலரே, அந்த ஒரு சிலரில் அரசியல் சாதுரி யத்துக்காகவும், ஆட்சித் திறனுக்காகவும், நிர்வாகத்துக்காகவும் பேர் வாங்கியவர் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் வழிவந்த ராணி மங்கம்மாள் ஆவார்.

தமிழக மக்கள் மனதில் அழியா புகழ் கொண்டவர் இவர். தனது அரசியல் தந்திரத்தில் வல்லவராக திகழ்ந்தார். எதிரி களை தன் வீரத்தால் தவிடு பிடி செய்தார் என்று வரலாறு கூறுகிறது. முகலாயப் பேரரசின் அச்சுறுத்தல் இருந்த சமயத்தில், மதுரை நாயக்கர் சமஸ்தானத்தை திறம்பட ஆண்ட வீரமங்கை இவரென சரித்திரம் சொல்கிறது. 17-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மங்கம்மாள் காலத்துக் கட்டிடங்கள் மதுரையில் இன்றும் பல இடங்களில் நிற்கின்றன.

இராணி மங்கம்மாள், மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கரிடம் (1659 -1682) தளபதியாக இருந்த தப்பகுள லிங்கம நாயக்கர் அவர்களின் மகளாவார். சொக்கநாத நாயக்கர் மங்கம்மாவைத் திருமணம் செய்து கொண்டார்.

ஆயினும் அவரை இராணியாகப் பட்டம் சூட்டவில்லை. தஞ்சாவூரை ஆண்ட விஜயராகவ நாயக்கரின் மகளைத் திருமணம் செய்ய சொக்கநாத நாயக்கர் நினைத்தார். ஆனால் அது தோல்வியில் முடிந்தது. 1682-ம் ஆண்டு சொக்கநாத நாயக்கர் இறந்தபோது அரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் மூன்று மாத குழந்தை. எனவே தன் மகனைக் காக்க வேண்டி உடன் கட்டை ஏறாத மங்கம்மாள் ஆட்சிப் பொறுப்பினை காப்பாளராக ஏற்றார்.

மங்கம்மாள் தனது மகன் அரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கருக்கு சின்ன முத்தம்மாள் என்பவரைத் திருமணம் செய்வித்தார். அதன் பிறகு அவருக்கு முடி சூட்டினார். அன்னையின் உதவியோடும் அறிவுரைகளோடும் அரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் திறமையாக ஆட்சி செய்தார். தந்தை சொக்கநாத நாயக்கர் இழந்த பகுதிகள் சிலவற்றை போரிட்டு

மீட்டார். (மலேசியாவில் வாழும் வரலாற்று ஆய்வாளர் ஜேபி எனப்படும் ஜெயபாரதி தனது கட்டுரை ஒன்றில் முத்துவீரப்பர் காலத்தில் நடந்த முக்கியச் சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுகிறார்)

ஔரங்கசீப் காலத்தில் யானையை அலங்கரித்து அதன் முதுகில் ஆடம்பரமாக பீடம் அமைத்து, அதன் மீது ஒரு தங்கத் தாம்பாளத்தில் ஔரங்கசீப்பின் செருப்பு ஒன்றை வைத்து, ஊர் ஊராக ஊர்வலம் வந்தார்கள். கூடவே, ஜுல்பிர்கான் என்ற தளபதியோடு ஒரு படைப் பிரிவும் வரும். யாராவது மன்னர்கள், இந்தச் செருப்பை மதிக்கவில்லை என்றால், அவர்கள் கடுமை யாக தண்டிக்கப்படுவார்கள். இதற்குப் பயந்து, பல மன்னர்கள் யானையை எதிர் கொண்டு வரவேற்று செருப்பை வணங்கி மரியாதை செலுத்தினர்.

ராணி மங்கம்மாளை பற்றிய கும்மி பாட்டு:

**வீராதி வீரம்மம்மா வீரகுலத்து ராணியம்மா**
**ராஜகம்பளத்து நாயக்கர் குலம் பிறந்த**
**ராணியார பாரு, ராணி மங்கம்மானு பேரு**
**கோவில் குளம் கட்டி வெச்சு, சரித்திரத்தில் இடம் பிடிச்ச**
**சாதனையாளர் யாரு ராணி மங்கம்மானு பேரு..**
**மதுரைய ஆண்டவங்க மானமுள்ள ஜாதியிங்க,**
**மறக்குல ராணியம்மா மங்கயர்குல திலகமம்மா.**
**ராணியார பாரு ராஜ கம்பளத்து ஆளுகள பாரு ..**
**மண்ணு உள்ளவரை மங்கம்மாளை பாடி நிற்கும்**
**நாடு உள்ளவரை நாயக்கர் புகழ் பாடி நிற்கும்**
**தந்தனனனே நானே தானே தந்தேநானே நானே...**

ஒவ்வொரு நகரிலும், இந்தச் செருப்பு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மன்னரின் அரசாளும் இருக்கையில் வைக் கப்படும். அந்த மன்னர் விழுந்து வணங்கி ஔரங்கசீப்புக்கு அடங்கிக் கப்பம் கட்டுவ தாக சாசனம் எழுதிக் கொடுக்க வேண்டும். இந்தச் செருப்பு ஊர்வலம் மதுரை நாட்டின் எல்லையான காவிரிக் கரைக்கு வந்து சேர்ந் தது. மன்னர் முத்துவீரப்பர் கண்டுகொள்ள வில்லை.. கோட்டைக்குள்செருப்புத்தாம்பா ளத்தைத் தூக்கிவந்தனர். முத்துவீரப்பரோ, அதை வணங்குவதற்குப் பதிலாக தன்னு டைய ஒரு காலை அந்தச் செருப்புக்குள் நுழைத்துக்கொண்டு தங்கத் தாம்பாளத்தை ஓங்கி எத்திவிட்டார்.

முட்டாளே, உங்கள் டில்லி பாஷாவுக்கு மூளை இல்லையா? ஒரு காலுக்கு மட்டும் செருப்பை அனுப்பி இருக்கிறானே? இன் னொரு செருப்பு எங்கே? எனக்கு வேண்டி யவை இரண்டு செருப்புகள் அல்லவா? என்று கேலியாகக் கேட்டார் முத்து வீரப்பர்.

அதோடு, ஔரங்கசீப் தன் செருப்பு ஊர்வலத்தை நிறுத்திக்கொண்டார் என்று அந்தக் கட்டுரை கூறுகிறது.


ஏழாண்டு காலம் நல்வழியில் ஆட்சி செய்து வந்த அரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் பெரியம்மை நோயால் 1688-ல் காலமானார். உடனே உடன்கட்டை ஏற முயற்சித்தார் சின்ன முத்தம்மாள். அப்போது அவர் கர்ப்பமாக இருந்ததால் உடன் கட்டை ஏற உற்றார், உறவினர் அவரை அனுமதிக்க வில்லை.

கணவர் இறந்த சிறிது நாளிலேயே ஆண் மகனைப் பெற்றெடுத்த சின்ன முத்தம்மாள் கணவரின் பிரிவு தாங்காமல் குளிக்க பயன்படுத்தும் பன்னீர் கலந்த நீரை அளவுக்கு அதிகமாக குடித்து ஜன்னி கண்டு உயிரிழந்தார்.

அம்மன்னரின் மகனான விஜயரங்க சொக்கநாதருக்குப் பெயரளவில் பட்டம் சூட்டப்பட்டது. அவர் சார்பில் அவருடைய பாட்டியும், சொக்கநாத நாயக்கரின் மனைவியுமான மங்கம்மாள் காப்பாட்சிய ராக பதவி ஏற்றுக்கொண்டு, இராணி மங்கம் மாள் என்ற பெயரில் 1706 வரை ஆட்சி நடத்தினார்.

மங்கம்மாள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காலத்தில் போர்கள் அதிகம் நடைபெற வில்லை. இவர் அண்டையில் உள்ள அரசு களிடம் நட்புறவையே விரும்பினார். ஆயி னும் தஞ்சை மராத்தியர்கள், முகலாயர்கள், திருவாங்கூர் அரசு, போன்றவர்களால் சவாலைச் சந்திக்க வேண்டி இருந்தது.

**- தொடரும்...**



- சிறுகதை பக்கம்

# புண்ணியம் என்பது என்ன?

நம்மிடம் உள்ளதை நம்மால் முடிந்ததை செய்வது. மற்றவர்கள் நல்லாயிருக்க வேண்டும் என்ற எண்ணம் படைத்தவன் மட்டுமே புண்ணியத்தைச் செய்ய வேண்டும் என்று நினைப்பான். அப்படிப்பட்ட நல்ல மனம் ஒன்றே போதும் புண்ணியம் செய்வதற்கு. ஆம். புண்ணியம் செய்ய மனம் வேண்டுமே தவிர பணம் தேவையில்லை. உங்கள் மனம் நல்லதையே நினைக்கட்டும் அதுவும் மற்றவர்களுக்காக இருக்கட்டும்.

மற்றவர்களின் துக்கங்களை உங்களது என்று எண்ணி வருந்துங்கள். உங்களுக்கு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை மற்றவர்களுக்காக வாது கிடைக்கட்டும் என்று வேண்டிக் கொள்ளுங்கள். அனைத்து உயிர்களுக்கும் உங்களுக்கும் தொடர்பு உண்டு என்று எண்ணிக் கொள்ளுங்கள். உங்களால் அனைவருக்கும் அன்பான ஆதரவான எண்ணங்களை அளிக்க முடியும் என்று எண்ணுங்கள். உங்கள் எண்ணங்கள் அனைத்தையும் நிறைவேற்றும் என்று நம்புங்கள்.

மற்றவர்களுக்காக உதவ இறைவனிடம் வேண்டுங்கள். தன்னல மற்ற எண்ணத்தை இவ்வுலகில் பரவ விடுங்கள். அனைவரும் உங்களுக்கு அன்பானவர்களாக மாறிவிடுவார்கள். உங்கள் உள்ளம் மகிழ்ச்சியாகி விடும். அனைவரும் நிம்மதியாக வாழ்வார்கள் அந்த மகா புண்ணியம் உங்களை மட்டுமே வந்து சேரும்.

ஒன்றுமில்லையே. பைசா கூட செலவு செய்யவில்லை. எங்கும் அலையவில்லை. யாரிடமும் கோபம் கொள்ளவில்லை. பொய் கூறவில்லை. யாரிடமும் எதற்காகவும் கையேந்தவில்லை. யாரும் உங்களை குறைகூறப் போவதில்லை. எதையும் இழக்கவில்லை. எதையும் இழக்காமல் நீங்கள் புண்ணியத்தை மட்டுமே சம்பாதிக்கிறீர்கள். சரி, இதை எப்படி செயல் வடிவத்திற்கு கொண்டு வருவது என்பதை பார்ப்போம்.

தினமும் ஏதேனும் ஒரு நேரத்தில் யாராவது ஒருவர் நன்றாக இருக்க வேண்டும் என்று எண்ணுங்கள். இதற்காக நேரம் காலம் பார்க்கத் தேவையில்லை. எந்த நேரத்திலும் யாருக்காகவும் எண்ணிக் கொள்ளலாம்.

ஆம்புலன்ஸ் வண்டிச் சத்தம் கேட்கும் போதல்லாம் அதில் பயணம் செய்பவர் நல்ல முறையில் குணம் அடைய இறைவனை வேண்டிக் கொள்ளுங்கள். யாரோ ஒருவர் விபத்தில் அடிபட்டுவிட்டார் என்று கேள்விப்பட்டால் அவர் உடல் நலம் பெற எண்ணிக்கொள்ளுங்கள்.

மனிதர்கள் மட்டுமல்ல அனைத்து உயிர்களிடமும் இந்தச் செயலை செய்யுங்கள். தெருவோரம் ஒரு மரம் வெட்டப்பட்டிருந்தால் அதற்காகவும் எண்ணிக் கொள்ளுங்கள். அந்த மரத்தை வெட்டியவர் மேலும் சில மரங்களை நடட்டும் என்று. வெட்டப்பட்ட மரம் மற்றவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவட்டும் என்று.

உலகத்தில் உள்ள அனைவரும் நன்றாக இருக்கட்டும் என்று ஒற்றை வரியில் முடித்துக் கொள்ளாதீர்கள்.

ஒவ்வொருவரையும் நினைவில் வைத்து தனிப்பட்ட முறையில் அவர்களுக்காக அவர்கள் நன்மைக்காக வேண்டிக்கொள்ளுங்கள். மிகப் பெரிய புண்ணியம் உங்களை வந்து சேரும். இப்படியெல்லாம் செய்ய முடியுமா? என்றால் நிச்சயம் செய்ய முடியும்.

இந்த எண்ணங்களுக்காக நீங்கள் பணமாக செலவு செய்ய வேண்டியது எதுவும் இல்லை. ஆனால் இதன்மூலம் கிடைப்பதோ மிகப் பெரியபுண்ணியம்.

எனவே புண்ணியம் செய்ய எதுவும் பணம் ஏதும் தேவையில்லை ,நல்ல எண்ணங்களுடன் கூடிய நல்ல செயல்கள் உடன் கூடிய மனம் இருந்தால் போதும். புண்ணியத்தைச் சேர்க்க இந்த பதிவில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை இன்றிலிருந்தே செய்ய தொடங்குவோம்.

- ஜெயா



# ரஜினி-கமல் இருவருக்கும் தடை!

**நடிகர் கமல்,**
**ரஜினி நிகழ்ச்சிகளின் எதிரொலியாக,**
**கல்லூரிகளில் அரசியல்வாதிகளின் நிகழ்ச்சிகளுக்கு,**
**தமிழக அரசு தடை விதித்துள்ளது.**

மக்கள் நீதி மையத்தின் தலைவர், நடிகர் கமல், பல்வேறு கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை பல்கலைகளின் விழாக்களில் பங்கேற்கிறார். இந்த விழாக்களில் மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் அவர், மத்திய - மாநில அரசுகளை விமர்சித்தும், அரசியல் கட்சிகளை விமர்சித்தும், பல்வேறு கருத்துகளை பரப்பி வருகிறார்.

அதேபோல், நடிகர் ரஜினியும், ஒரு பல்கலை விழாவில் பங்கேற்று, தான் துவங்க உள்ள அரசியல் கட்சி குறித்து பேசினார்.

இதுகுறித்து, ஆளுங்கட்சியினர் தரப்பில், தமிழக முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து, கல்லூரிகளில் அரசியல் பேசும் நிகழ்ச்சிகளுக்கு, முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. உயர்கல்வித் துறை சார்பில், கல்லூரி கல்வி இயக்குனர் மஞ்சுளா, அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குனர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

கல்லூரிகள் நடத்தும் விழாக்களில் பங்கேற்போர் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள், தாங்கள் சார்ந்த அரசியல் கட்சியின் கொள்கைகளை, தங்கள் உரைகளில் பேசி வருகின்றனர். இத்தகைய நிகழ்வுகள், மாணவர்களின் கல்விக்கு இடையூறாக அமையும். மாணவர்களின் மனப்பான்மை பாதிக்கப்படும்.

கல்லூரிகளின் நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்கள், தங்களின் அரசியல் கொள்கைகள், பிற இயக்கங்களின் கருத்துகளை, மாணவர்களிடம் பேசுவதை தவிர்க்க வேண்டும். இவ்வாறான விழாக்களுக்கு, கல்லூரிகள் அனுமதி தரக்கூடாது. இதுகுறித்து, மண்டல கல்லூரி இணை இயக்குனர்கள், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

- குருதேவ்



# சுத்தியலை ஓங்கி அறைய வேண்டிய நேரம் இது

அரசினால் நீதி மறுக்கப்படும்போது ஏழை குடிமக்கள் நாடும் இடம் நீதிமன்றங்கள். அத்தகைய நீதித்துறையின் உயர் அமைப்பே அரசின் பாதுகாப்பைத்தான் நாடி நிற்கிறது என்றால் நீதித்துறை மீது மக்களுக்கு எப்படி நம்பிக்கை வலுப்படும்? கடந்த வாரம் மத்திய அரசு, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு ஆதரவாக வரிந்து கட்டிக்கொண்டு வந்தது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு தேர்ந்தெடுத்த நீதிபதி நியமனங்களுக்கான பட்டியலிலிருந்து ஒருவரை ஏற்றுக்கொண்டு, இன்னொருவரை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்குக் கடிதமும் எழுதினார் மத்திய சட்ட அமைச்சர். அரசின் நிராகரிப்புக்குக் காரணம் கேரளாவை பிரதிநிதிப்படுத்த ஏற்கெனவே ஒருவர் இருக்கிறார், மற்றும் பரிந்துரைக்கப் படும் நீதிபதியைவிட பணிமூப்பு உள்ளவர்கள் பலர் வரிசையில் உள்ளனர் என்பதாகும். இந்த நிராகரிப்பு ஏற்கும்படியாக இல்லை என்றாலும், இதன்மூலம் மக்களவையில் தங்களுக்குப் பெரும்பான்மை வலு இருப்பதை நீதிபதிகளுக்கு மறைமுகமாக நினைவூட்டுகிறது மத்திய அரசு!

பாஜகவுக்கும் காங்கிரஸுக்கும் ஒருவரை யொருவர் கட்டோடு பிடிக்காது என்றாலும் நீதித்துறையை அடக்கி வைப்பதில் ஒன்று சேர்ந்துள்ளனர். நாடாளுமன்றத்தில் ஒருமித்த உணர்வோடு நிறைவேற்றப்படாவிட்டாலும் மின்னல் வேகத்தில் நிறைவேற்றப்பட்டது தான் 'தேசிய நீதித்துறை நியமன ஆணையம்' பற்றிய மசோதா.

இது அரசியல் சட்டத்துக்கே முரணானது என்று கூறி அதைவிட வேகமாக இதைச் செல்லாததாக்கியது உச்ச நீதிமன்றம். காங்கிரஸும் பாஜகவும் பொது எதிரியான நீதித்துறையின் மீது வைத்த கண்களை எடுக்கவில்லை.

நீதிபதிகள் நியமனத்தை அரசின் கையில் கொடுத்துவிட்டு, அதற்குக் காலம் பூராவும் 'நன்றிக்கடன்' பட்டுக்கொண்டிருக்கமுடியாது என்று கூறித்தான் அந்த ஆணையத்தை 4-1 என்ற தீர்ப்பில் நிராகரித்தது உச்ச நீதிமன்றம். அந்த ஆணையம் இல்லாமலேயே இப்போது அரசின் தயவை நாடி நிற்க வேண்டிய நிலைக்கு வந்திருப்பதும் அதே நீதித்துறைதான்!

முக்கியமான வழக்குகளை விசாரிக்கும் அமர்வுகளை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி நியமிக்கும் விதத்தைக் கேள்வி கேட்கின்றனர் இதர மூத்த நான்கு நீதிபதிகள். நீதிபதி லோயா மரணம் தொடர்பாகவும், மருத்துவக் கல்லூரி ஊழல் வழக்கு தொடர்பாகவும் நீதிபதிகள் மீதான லஞ்சப் புகார்கள் குறித்து கேள்வி கேட்கின்றனர் ஊழல்களுக்கு எதிராகத் தீவிரமாகச் செயல்படும் வழக்கறிஞர்கள்; காங்கிரஸ் கட்சியோ பிற எதிர்க்கட்சிகளை


சேர்த்துக்கொண்டு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியை, பதவியிலிருந்து அகற்றும் தீர்மானத்துக்கான முன்மொழிவைக் கொடுத்துவிட்டுக் காத்துக் கொண்டிருக்கிறது. ஆளும் பாஜகவோ உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு ஆதரவான நிலையை எடுத்திருக்கிறது.

நீதிபதிகள் குழு தேர்ந்தெடுத்தவர்களை அரசு ஒப்புதல் அளித்து நியமிப்பதில் கால தாமதம் ஆவது வழக்கமானதுதான்; ஆனால் இப்போது உயர் நீதிமன்ற நீதிபதியின் பதவிக் காலம் மாற்றப்படுகிறது; நீதிபதி கே.எம். ஜோசப்பை நியமிக்க வேண்டும் என்ற பரிந்துரையை 'மறுபரிசீலனை செய்யுமாறு' நீதிபதிகள் குழுவுக்கே அரசு துணிச்சலாகத் திருப்பி அனுப்பியிருக்கிறது.

'பணிமூப்பெல்லாம் பார்க்க வேண்டாம், கே.எம். ஜோசப்பை உச்ச நீதிமன்ற நீதிபதியாக்குங்கள்' என்று நீதிபதிகள் குழு உத்தரவிட்டால், உச்ச நீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக பதவி மூப்பின் அடிப்படையில் நியமனம் பெற வேண்டிய நீதிபதி ரஞ்சன் கோகோயை மத்திய அரசும் புறக்கணிக்கும்.

ஏராளமான முக்கிய வழக்குகள் தேங்கிக் கிடக்கும்போது, ஊடகங்களில் பிரபலமாவதற்காக பொது நலன் கோரும் மனுக்கள் மட்டும் உடனுக்குடன் விசாரிக்கப்படுவது மக்களால் கவனிக்கப்படாமல் இல்லை. 'தேசிய நீதித்துறை நியமன ஆணையம்' உடனடியாக நிராகரிக்கப்பட்டதும் அப்படித்தான் பார்க்கப்படுகிறது; நீதிபதிகள் தங்களுக்கு ஏதாவது ஒரு இடையூறு அல்லது அச்சுறுத்தல் என்றால் மின்னல் வேகத்தில் செயல்பட்டு விடுகின்றனர் என்றே அதைப் பார்க்கின்றனர்.

நீதிபதிகளும் நீதித்துறை வல்லுநர்களும் ஒற்றுமையாக நின்று நீதித்துறையை அரசின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். அரசுக்குக் கட்டுப்பட்டதாக நீதித்துறை இருக்க வேண்டும் என்று இந்திரா காந்தி ஆசைப்பட்ட காலத்துக்குப் பிறகு, அந்த அமைப்புக்கு மிகப் பெரிய ஆபத்து



நேரிட்டுள்ள காலம் இது.

இப்போது நீதித்துறை தோற்றால் அதன் விளைவாக மக்கள்தான் பெரும் பாதிப்பை அடைவார்கள். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அந்த அமைப்புக்காகவும் நீதிபதிகளை நியமிக்கும் குழுவுக்காகவும் அவர் அரசுடன் போராடியாக வேண்டும். அவருடைய சகோதர நீதிபதிகள் **1973-77** வரையிலான காலத்தில் என்ன நடந்தது என்பதை நினைவுகூர்ந்தால் போதுமானது;

இந்திரா காந்தி பணிமூப்பை மனதில் கொள்ளாமல் யாரையெல்லாம் நீதிபதியாக நியமித்தாரோ அவர்களில் ஒருவர்கூட நம்முடைய நினைவில் இப்போது இல்லை. ஆனால் அவருடைய எதேச்சாதிகாரத்தை எதிர்த்தும் நீதித்துறையின் சுதந்திரத்தை வலியுறுத்தியும் நீதிபதி பதவியை யாரெல்லாம் உதறித் தள்ளினார்களோ அந்தப் பெருமக்கள் அனைவரும் நன்றியுடனும் பெருமிதத்துடனும் நினைவுகூரப்படுகின்றனர். இப்போதைய நீதிபதிகள் சிலருக்கும் கூட அந்தச் சோதனைகள் காத்திருக்கின்றன.

**- அகிலாண்டேஸ்வரி**



## மீண்டும்

# பணத் தட்டுப்பாடா?

## அதிர்ச்சியில் மக்கள்...

கடந்த சில நாட்களாக இந்தியா முழுவதும் பல நகரங்களில் பெரும்பாலான ஏடிஎம் இயந்திரங்கள் பணமில்லாமல் மூடிக் கிடக்கின்றன. அறிவிக்கப்படாத பணத் தட்டுப்பாடு காரணமாக மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். மீண்டும் ஒருமுறை பால்பவுடர் வாங்க பணமில்லாத நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்கின்றனர். மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் மக்களின் பணத்தேவைகளை சரியாகக் கணிக்கவில்லை என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள். பணமதிப்பு நீக்கத்தால் மக்கள் மின்னணு பரிவர்த்தனைக்கு மாறுவார்கள் என்கிற இலக்கு தோல்வியடைந்த நிலையில், பணத் தட்டுப்பாட்டால் அதை உருவாக்க முனைவதாக ஒருசில தகவல்கள் வெளிவந்துள்ளன.

உண்மையில் இவை மட்டும்தான் காரணமா? என்னதான் நடக்கிறது இந்தியாவின் பணப் புழக்கத்தில்.? என்னதான் செய்கிறது அரசு?

2016-ம் ஆண்டு நவம்பர் 8-ம் தேதி என்றதுமே பலருக்கும் இந்த நினைவுகள் வந்து நெஞ்சில் மோதலாம். அந்த பாதிப்பிலிருந்து இன்னமும் மீளாத இந்த பதினைந்து மாதங்களில் மீண்டும் அப்படியான ஒரு நிலை உருவாகி வருகிறது.

மக்கள் வங்கிகளில் இருந்து பணம் எடுக்கும் அளவு கடந்த மூன்று மாதங்களில் அதிகரித்துள்ளது. குறிப்பாக ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலத்தில் ரூ.1.4 லட்சம் கோடி பணம் எடுக்கப்பட்டுள்ளது.

2016-ம் ஆண்டில் இதே காலத்தில் 1.1 லட்சம் கோடி எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் பணமதிப்பு நீக்கம் காரணமாக பணம் எடுக்கும் விவரங்களை ஒப்பிட முடியாது. அதுபோல டெபாசிட்களை பொறுத்தவரை மார்ச் மாத நிலவரப்படி 6.7 சதவீதமாக உள்ளது. ஆனால் கடந்த ஆண்டில் இது 15.3 சதவீதமாக இருந்தது. மக்கள் வங்கிகளில் டெபாசிட் செய்யும் விகிதம் குறைந்துள்ளதுடன், பணம் எடுக்கும் போக்கும் அதிகரித்துள்ளது.

வளர்ச்சி அதிகமாக இருப்பதால் மக்களிடம் இருக்கும் பணத்தின் அளவு ரூ.19.4 லட்சம் கோடியாக இருக்கிறது. ஆனால் பணப் புழக்க மதிப்போ ரூ.17.5 கோடியாக இருக்கிறது. இதனால் உருவாகும் பற்றாக்குறை காரணமாகத்தான் பணத் தட்டுப்பாடு உருவாகியுள்ளது என்கிறது எஸ்பிஐ அறிக்கை. ஆனால் இந்த பற்றாக்குறை தொகை ரூ.1.9 லட்சம் கோடிதான். அதிலும் டிஜிட்டல் பரிவர்த்தனை மதிப்பு ரூ.1.2 லட்சம் கோடியாக உள்ளது. இதனால் ரூ.70,000 கோடி அளவுக்கு பணத்தட்டுப்பாடு இருக்கும் என்கிறது எஸ்பிஐ ஆய்வு.

பணமதிப்பு நீக்கத்துக்கு பின்னர் வெளியிடப்பட்ட ரூபாய் நோட்டுகளுக்கு ஏற்ப ஏடிஎம் இயந்திங்களில் பணம் அடுக்கும் பெட்டியிலிருந்து, மென்பொருட்கள் வரை மாற்ற வேண்டும். பணமதிப்பு நீக்க காலத்தில் இந்த கட்டமைப்புக்கு வங்கிகள் ரூ.3,800 கோடி வரை செலவு செய்தன. 200 ரூபாய் நோட்டு வெளியிடப்பட்ட பிறகு ஏடிஎம் சேவை வழங்கும் நிறுவனங்கள் இயந்திரங்களின் கட்டமைப்பை மாற்றவில்லை. ஏற்கெனவே ரூ.3,800 கோடி நஷ்டம் என்பதால் மீண்டும் இதற்காக வங்கிகள் செலவிட

வில்லை. ரூபாய் நோட்டுகள் அச்சடிப்பது 44 சதவீதம் குறைந்துள்ளதாக சில தகவல்கள் வெளிவந்துள்ளன. நாசிக் ரூபாய் நோட்டு அச்சகத்தில் 500 ரூபாய் நோட்டு அச்சடிப்பதை 2017- ம் ஆண்டு நவம்பரிலிருந்து நிறுத்தியுள் ளனர். ரூ.200, ரூ.100, ரூ.20 நோட்டுகளையும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் நிறுத்தியுள்ளதாக அந்த தகவல்கள் கூறுகின்றன. 2017-18-ம் ஆண்டுக்கான 500 ரூபாய் அச்சடிப்பு அளவு முடிந்துவிட்டதால் நிறுத்தப்பட்டுள்ளது.

இதர ரூபாய் நோட்டுகள் புதிய வடிவமைப் பில் கொண்டு வரும் திட்டம் உள்ளதால் அச்சடிப்பு நிறுத்தப்பட்டுள்ளதாக அந்த தகவல் குறிப்பிட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜூலை முதல் 2000 ரூபாய் நோட்டுகளை அளிப்பதை ரிசர்வ் வங்கி நிறுத்திவிட்டது.

வங்கிகளின் பணத் தேவைக்கும் ஆர்பிஐ அளிப்புக்கும் மிகப் பெரிய வேறுபாடு உள் ளது. ஒரு மாதத்திற்கு வங்கிகளுக்கு 40,000 கோடி முதல் 45,000 கோடி வரை தேவைப் படுகிறது. ஆனால் ஆர்பிஐ 20,000 கோடிதான் அளிக்கிறது. மக்களின் பணத் தட்டுப்பாட்டை பயன்படுத்தி பேடிஎம் போன்ற தனியார் செயலி நிறுவனங்கள் வளர்கின்றன.

நாட்டின் உயர் மதிப்பிலான பணம்தான் பதுக்கலுக்கு பயன்படுகிறது என 1000 ரூபாய் நோட்டை தடை செய்தது அரசு. ஆனால் அதற்கு பதிலாக உயர்மதிப்பாக 2000 ரூபாய் நோட்டை கொண்டுவந்தது. "இந்த பணம் அதிக மதிப்பு கொண்டதால் மக்கள் கையில் சாதாரணமாக அதிகம் புழங்கவில்லை. அதனால் தினசரி பரிமாற்றத்துக்கு பயன்பட்ட நோட்டாகவும் இல்லை. ஆனால் அதிலும் தட்டுப்பாடு நிலவுகிறது" என்கிறார் எம்பேஸ் பேமண்ட் சிஸ்டத்தின் ரவி ராஜகோபாலன்.

பணமதிப்பு நீக்கத்தால் மின்னணு வர்த்தகம் அதிகரிக்கும் என்றனர். பணத் தேவை அதிகரித்துள்ளது. பணத்தட்டுப்பாடும் நிலவுகிறது. 1,000 ரூபாய் கறுப்பு பணம் ஒழியும் என்றனர். இப்போதோ 2,000 ரூபாயாக பதுக்கப்படுகிறது. பணமதிப்பு நீக்கம் போல, இந்த முறையும் தலையைச் சொறிய கொள்ளிக் கட்டையை எடுத்தால் நிர்வாக திறமையற்ற அரசு என நொந்து கொள்வதைத் தவிர வழி யில்லை.

பணமதிப்பு நீக்கம் குறித்து சமீபத்தில் கருத்து தெரிவித்த ஆர்பிஐ முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜன், "பணமதிப்பு நீக்கம் திட்ட மிடாமல் செயல்படுத்திய ஒன்று. அதனால் கிடைத்த பயன்கள் மிகவும் குறைவு. வரலாறுக்கு வேண்டுமானால் பயன்படும்" என்று கடுமையாக சாடியுள்ளார்.

**- கே.ரமேஷ்குமார்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை ✷ அருணை முரசு

## Cell : 93821 33334 / 63819 50149

**Email : writermouriyan@gmail.com**



# எங்கே சமத்துவம்?

தொழிலாளர்களின் எண்ணிலடங்காப் போராட்டங்களின் விளைவாகத் தான் எட்டு மணி நேர வேலை நேரம் உலகம் முழுவதும் உறுதிசெய்யப்பட்டது. உழைப்புக் கேற்ற ஊதியம், பணிப் பாதுகாப்பு, வேலைக்கான அங்கீகாரம் போன்றவற்றிலும் ஓரளவு முன்னேற் றம் ஏற்பட்டிருக்கிறது. உரிமைகளைப் போரா டிப் பெற்றதைக் குறிக்கும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் மே 1-ம் தேதியை உலகம் முழுவதும் உழைப்பாளர் நாளாகக் கொண்டாடி மகிழ் கிறார்கள். உழைப்பாளர்களைக் கொண்டாடும் விதமாக நம் மாநிலத் தலைநகர் சென்னையிலும் மெரினா கடற்கரையில் உழைப்பாளர் சிலை உண்டு. ஆனால், அதில் ஓர் ஓரமாகக்கூடப் பெண்ணுக்கு இடமில்லை.

கல் பிளந்து, மலை பிளந்து, கருவியெல் லாம் செய்தவை ஆணின் கரங்கள் மட்டும் தானா? இப்படியொரு சிறு கேள்விக்கே எதற் கெடுத்தாலும் பெண்கள் ஏட்டிக்குப் போட்டி யாகப் பேசுவதாக நினைத்துப் புறந்தள்ளுகிறவர் களும் கேலியாகப் புன்னகைக்கிறவர்களும் உண்டு. ஆனால், ஆண்டாண்டு காலமாக ஆண்களின் மனதில் மட்டுமல்ல, பெண்களின் மனதிலும் ஆழமாக உழப்பட்டுவிட்ட பெண் ணடிமைச் சிந்தனை நம்மை வேறெப்படியும் சிந்திக்கத் தூண்டாது.

ஆசிரியர் பணி, செவிலியர் பணி நீங்கலாக வேறெந்தப் பணியைச் சொன்னாலும் நம் மனங்களில் விரிவது ஓர் ஆணின் பிம்பம்தானே! பிறகெப்படி உழைப்பாளர் என்றால் மட்டும் பெண்ணின் சித்திரம் நினைவுக்கு வரும்?

சூரியன் கிழக்கில் உதிப்பது எத்தனை இயல்போ அத்தகைய இயல்போடுதான் பெண் களின் உழைப்பு காலங்காலமாகச் சுரண்டப் பட்டுவருகிறது. வீட்டில் தொடங்கி சமூகம் வரை அவர்களது பங்களிப்பு கணக்கில் சேர்த்துக் கொள்ளப் படாமல் புறக்கணிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக எழும் குரல்கள்கூட, ‘இதெல் லாம் பெண்ணின் அடிப்படைக் கடமையல் லவா?’ என்ற கேள்வியில் நசுக்கப்படுகின்றன.

கேள்வி கேட்டவர்களையே குன்றிப்போகச் செய்யும் அளவுக்குப் பெண்கள் மீது பல்வேறு மாண்புகளை ஏற்றிவைத்திருக்கிறோம். உழைத்து உழைத்து கிஞ்சித்தும் பலனில்லாமல் போவதற்கென்றே பெரும்பாலான பெண்கள் விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பெண்களின் உழைப்புக்கான அங்கீகாரம் இருக்கட்டும், உரிய ஊதியம் கிடைக்கிறதா? இந்தியாவைப் பொறுத்தவரை விவசாயத்தில் 70 சதவீதப் பணிகளைப் பெண்களே செய்கிறார் கள். கட்டிட வேலை, வீட்டு வேலை போன்ற

முறைசாராத் தொழில்களிலும் பெண்களின் பங்களிப்பே அதிகம்.

குறிப்பாகக் கட்டிடத் தொழிலில் மேஸ்திரி எனப்படும் ஆணைவிடச் சித்தாளாகப் பணி புரியும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகம். ஆனால், பெண்களுக்குக் கொடுக்கப்படும் கூலி, ஆண்களைவிட பல மடங்கு குறைவு. மேஸ்திரியின் வேலையைப் பெண் செய்தாலும் மேஸ்திரியாக அவள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

பிபிசி நிறுவனத்தில் 30 ஆண்டுகளாகப் பணியாற்றிய அவர், தன்னுடன் ஒரே தகுதி நிலையில் வேலைபார்க்கும் ஆண் ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மிக அதிகமாக இருப்பதை அறிந்து தன் எதிர்ப்பைத் தெரிவித்தார். பாலினப் பாகுபாட்டு அடிப்படையிலான சட்டத்துக்குப் புறம்பான இந்தச் செயல்பாட்டைக் கண்டிக்கும்விதமாக பிபிசியின் சீனப் பிரிவு ஆசிரியர் பதவியைத் துறந்தார்.



சம வாய்ப்பையே பெண்கள் போராடித்தான் பெற வேண்டியிருக்கிறது. அரசுப் பணி தவிர்த்து தனியார் நிறுவனங்களிலும் முறைசாராத் தொழில்களிலும் சம ஊதியம் எப்போது கிடைக்கும் எனத் தெரியாது.

பெரு நிறுவனமோ சிறிய அளவில் செயல்படும் நிறுவனமோ எதுவாக இருந்தாலும் ஊதியப் பாகுபாட்டையும் உழைப்புச் சுரண்டலையும் சகித்தபடிதான் பெண்கள் பணிபுரிய வேண்டியிருக்கிறது. இல்லையெனில் வேலையைவிட்டு விலக வேண்டும். இந்த இரண்டைத் தவிர வேறெதுவும் தீர்வு இருக்கிறதா?

வேலைக்குச் செல்லும் பெண்களின் தோள்களில் சுமத்தப்படும் இரட்டைச் சுமை குறித்து



அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பல நேரம் கவலைப்படுவதில்லை. வீட்டு வேலைகளோடு குழந்தைகளையும் கவனித்துக் கொண்டுதான் அவர்கள் வேலைக்குச் சென்றாக வேண்டும். இந்தியக் குடும்ப அமைப்பில் சமையலறை என்னும் புறக்கணிக்கப்பட்ட பகுதியை பெண்களின் பெயரிலேயே எழுதி வைத்து விடுவார்கள்.

சமைக்கத் தெரியாத அல்லது கணவனைச் சமைக்கச் சொல்லும் பெண்கள், மாதர் குல மாணிக்கங்களாகக் கருதப்படுவதில்லை. பெண்களின் பெருமைக்குக் களங்கம் விளைவித்து விட்டதாக அவர்களை வசைபாடுகிறவர்களும் பல நேரம்பெண்களாகவே இருப்பது நகைமுரண். அவர்களை அப்படி வசைபாடும்படி மிக நேர்த்தியாக இந்தச் சமூகம் தயார் செய்து வைத்திருக்கிறது.

வேலைக்குப் போகும் பெண்களின் நிலையே இப்படியென்றால் வீட்டிலிருக்கும் பெண்களின் நிலை இன்னும் கவலைக்கிடம். கணவன் ஏதோ போர்க்களத்துக்குச் சென்று களமாடிவிட்டு வருவது போலவும் தான் வீட்டில் எதுவுமே செய்யாமல் பூமிக்குப் பாரமாக இருப்பது போலவும் நினைத்துக்கொள்வார்கள். அல்லது அப்படி நினைத்துக்கொள்ளும்படி நிர்பந்திப் படுவார்கள். பெண்கள் வீட்டில் செய்கிற வேலைக்குக் கூலி நிர்ணயித்தால் நிச்சயம் அவர்களும் கணிசமான ஊதியத்தை மாதந் தோறும் பெறுவார்கள்.

ஆனால், அவர்களை அப்படியெல்லாம் சிந்திக்கவிட்டால்தானே? சாலை விபத்தில் இழப்பீடு வழங்குவது தொடர்பான வழக்கு ஒன்றில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், இல்லத்



தரசிகளுக்கு அவர்கள் செய்யும் வேலைகளைக் கருத்தில்கொண்டு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்தது. ஆனால், அது அந்த ஒரு வழக்குக்கு மட்டுமாகிவிட்டது. மற்றபடி வீட்டு வேலைக்குக் கணக்குப் பார்ப்பது குடும்பப் பெண்களுக்கு அழகாகக் கருதப்படுவதில்லை.

அதிகபட்சமாக இல்லத்தரசிகளின் அங்கீ காரமும் ஊதியமும் இல்லாத வேலைகள் குறித்து குறும்படம் எடுக்கலாம், கவிதை எழுதலாம். மற்றபடி நம் வீட்டுப் பெண்கள் செய்யும் வேலைகளைத் துச்சமாக மதித்து, 'சோறாக்கி, பாத்திரம் கழுவுறதெல்லாம் ஒரு வேலையா?' எனக் கேட்டு இழிவுபடுத்துவதே அதிகம் நடக்கிறது.

வேலை செய்வதில் ஆண்களைப் போல் பெண்கள் இல்லை என்ற வாதமும் பரவலாக முன்வைக்கப்படுகிறது. மாதவிடாய், மகப்பேறு, மெனோபாஸ் எனத் தன் வாழ்நாளின் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு உடல் ரீதியான, மனரீதியான மாறுதல்களுக்கு ஆட்படும் பெண்களை ஆண்களுக்கு நிகராகப் பணியாற்றச் சொல்வதே தவறு.

பெண்ணுடலில் ஏற்படுகிற இந்த மாற்றங்கள் எல்லாம் அவளது பலவீனமல்ல, இயற்கை நிகழ்வு எனப் புரிந்துகொண்டவர்கள் ஆணுக்கு நிகராகப் பெண்கள் பணியாற்று வதில்லை எனப் பிதற்ற மாட்டார்கள்.

20 பெண்கள் பணியாற்றுகிற ஒவ்வொரு நிறுவனத் திலும் பாலியல் வன்முறை குறித்துப் புகார் செய்யும் வகையில் குழு அமைக்க வேண்டும், அந்த நிறுவனத்தில் பணிபுரியும் மூத்த பெண் ஒருவரை விசாரணை அதிகாரி களுள் ஒருவராக நியமிக்க வேண்டும் என்பது சட்டப் புத்தகத்தில் பாதுகாப்பாக இருக்கிறது. அதை எக்காரணம் கொண்டும் அமல்படுத்தி விடக் கூடாது என்ற கட்டுப்பாட்டுடன் இருக்கும் நிறுவனங்கள் நம் நாட்டில் பல உண்டு என்றுதான் சொல்ல வேண்டும்.

**- கனகதுர்கா**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI

**மக்கள் விசாரணை**

மக்களின் மனக்குமுறல்
**லஞ்ச ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-6 மே-2018 இதழ்-12

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
முனைவர் **ஆ. மவுரியன்,** B.A.,Dip. Journalism,

• ஆசிரியர் குழு
முனைவர் **காசி. அரங்கநாதன், A. காதர் மொய்தீன், V. அருணாச்சலம், A.C. குமார்**

• நிர்வாக ஆசிரியர்
**வீ. சிவசங்கர்,** B.B.A.,

• துணை ஆசிரியர்கள்
**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், D. ரவி, எஸ். சரவணன், பி. மாரிமுத்து, வீரஆறுமுகம், M. தரணி, கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி, சண்முகராஜ்**

• முதன்மை செய்தியாளர்கள்
**S. ராம்குமார்** சேலம் **M. சத்தியராஜ்,** நாமக்கல்.
**A. பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,** கோவை,
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா,** தென்சென்னை
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி,
**வெங்கடேசன்** தி.மலை **S. ரமேஷ், அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

• நிருபர்கள்
**A.D. ராஜேந்திரன், P. ராமலிங்கம், ஆபரகாம், எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, M.V.சங்கர்ராஜ், ஞானவேல், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஏழுமலை, பிரவின், சத்தியநாராயணமூர்த்தி, சதீஷ்குமார், N.குப்புசாமி,**

• சட்ட ஆலோசகர்கள்
**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர்,** B.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :
**M. சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS Creative's**

அலுவலகம் :
**மக்கள் விசாரணை**
நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : writermouriyan@gmail.com
news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com
**Cell : 93821 33334 / 63819 50149**



**Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.



# சுத்தத்தை தூக்கிப் பிடிக்கும் கிராமங்கள்!

தூய்மை இந்தியா திட்டத்தில் 100 சதவீதம் திறந்தவெளியில் மலம் கழிக்காத மாநிலங்களாக கேரளா, குஜராத், ஹரியாணா, உத்தராகண்ட், சிக்கிம் மாநிலங்கள் கோலோச்சுகின்றன. தமிழகம் ஓரிரு ஆண்டில் அந்த நிலையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாடு முழுவதும் 2,77,422 கிராமங்கள், 237 மாவட்டங்கள் திறந்தவெளியில் மலம் கழிக்காத பிராந்தியங்களாக மாறியுள்ளன. இதில் சில முன்னுதாரண கிராமங்களைப் பார்ப்போம்.

திருவள்ளூர் மாவட்டம் அதிகத்தூர் கிராமப் பஞ்சாயத்தின் தலைவராக இருந்தவர் சுமதி. தனது கிராமத்தில் இவர் ஆற்றிய சுகாதார மேம்பாட்டுப் பணிகளுக்காக மத்திய, மாநில அரசுகளின் விருதுகளைப் பெற்றவர். இவரது முயற்சியால் 100% திறந்த வெளியில் மலம் கழிக்காத கிராமமாக மாறியிருக்கிறது அதிகத்தூர்.

திண்டுக்கல் அருகே உள்ள பஞ்சம்பட்டி கிராமத்தில் எங்கு தேடினாலும் தெருவோரத்தில் அசுத்தத்தைப் பார்க்க முடியாது. காரணம், இங்கு சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தினமும் காலை, மாலை இரு வேளையும் தெருத் தெருவாக சென்று வீடுதோறும் குப்பைகளை சேகரிக்கிறார்கள் இந்த மகளிர் குழுவினர். அவற்றை ஊரின் ஒதுக்குப்புறமான இடத்தில் உள்ள கிடங்கில் மலைபோல குவிக்கின்றனர். இன்னொரு பக்கம் தள்ளுவண்டியில் பிளாஸ்டிக் குப்பைகளை கொண்டு வருகின்றனர் பெண்கள். அருகில் உள்ள அறையில் அரவை இயந்திரம் கரகரவென ஓடிக்கொண்டிருக்கிறது.

“எங்க கிராமத்துல மட்டுமில்லைங்க, சுத்து வட்டாரத்துல ஆலமரத்துப்பட்டி, பிள்ளையார் நத்தம், பித்தளைப்பட்டி உட்பட சுமார் 25 கிராமத்துல எங்கேயும் குப்பைகளை பார்க்க முடியாது. எல்லா கிராமப் பஞ்சாயத்திலேயும் பேசி குப்பையை சேகரிக்கிறோம். அதை தரம் வாரியாக பிரித்து, விவசாயத்துக்கான உரம் தயாரிக்கிறோம். பிளாஸ்டிக் குப்பையில் இருந்து கிடைக்கும் அரவையை கிலோ ரூ.25-க்கு விக்குறோம். அதை சாலை போட பயன்படுத்துறாங்க” என்கின்றனர் மகளிர் குழுவினர்.

ஹைட்ரோ கார்பன் பிரச்சினையால் அறியப்பட்ட நெடுவாசல் கிராமம் சுமார்



7 ஆண்டுகளுக்கு முன்பே திறந்தவெளியில் மலம் கழிக்காத கிராமமாக மாறிய பெருமை கொண்டது. இங்கு இருக்கும் கிழக்கு நெடுவாசல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியரான கருப்பை யன் ஆறுமுகம் இந்த சாதனையை நிகழ்த்தி யுள்ளார். அதிகாலையில் பள்ளி மாண வர்கள் மூலம் தண்டோரா போட்டு, திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை ஒழித்துள்ளார்.

பட்டுக்கோட்டை அடுத்த வேப்பங்குளம் கிராமத்தில் உள்ள பூங்குளம், மண் மூடி சீமை கருவேலக் காடாக மாறி, திறந்தவெளி கழிப்பிடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இங்கு பஞ்சாயத்து தலைவராக இருந்த சிங்கதுரை இங்கு மலம் கழிக்க தடை விதித்தார். நூறு நாள் வேலை திட்டம் மூலம் குளத்தை தூர் வாரி புனரமைத்தார். கூடவே கிராமத்தில் அத்தனை வீடு களுக்கும் அரசாங்கத்தின் திட்டங்களைப் பயன்படுத்தி கழிப்பிடம் கட்டிக் கொடுத்தார்.

இப்போது, கிராமத்தில் நுழைந்ததுமே அழகான பூங்காவுடன் நீர் நிறைந்து வரவேற்கிறது பூங்குளம். குளத்தைச் சுற்றி மக்கள் நடைபயிற்சி மேற்கொள்கின்றனர்.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே இருக்கிறது மாணிக்கல் கிராமப் பஞ்சா யத்து. இங்குள்ள பள்ளியின் ஒவ்வொரு வகுப்பறையின் முகப்பிலும் ‘மாணவர் நாடாளுமன்றம்’ என்கிற தலைப்பில் அறிவிப்பு ஒட்டப்பட்டிருக்கிறது.

‘குப்பையை குப்பைத் தொட்டியில் போடுங்கள். தினமும் கை, வாய், பின் பக்கத்தை சுகாதாரமாக பராமரிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். கை, காலைக் கழுவிவிட்டு வகுப்பறைக்குள் வாருங்கள். பள்ளியில் சுகாதார குறைபாடு இருந்தால் தலைமை ஆசிரியரிடம் தெரிவியுங்கள்’ என்று அதில் எழுதப்பட்டுள்ளன.

இவை எல்லாம் கண்முன் நிகழ்ந்து கொண்டிருக்கும் சுகாதார மேம்பாட்டுக் கான சாட்சிகள். நம்பிக்கையுடன் செயல் பட்டால் மொத்த நாட்டையும் 100 சதவீதம் சுகாதாரமானதாக மாற்றலாம்!

**– சத்தியராஜ்**

# தொடரும் கனரக வாகன ஓட்டிகளின் அராஜகம்..!

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தாலுக்கா, ஆரணி டவுன் எல்லைக்குள் மருத்துவ மனைகள், நீதிமன்றம், பள்ளி கல்லூரிகள், வங்கிகள் பொது நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக நடமாடக்கூடிய இடங்களில் வாகன ஓட்டிகள் அஜாக்கிரதையாக ஓட்டியும், வாகன ஒலியை அதிகமாகவும் எழுப்பியும் பொதுமக்களுக்கும் இடையூறு கொடுத்து வருகிறார்கள்.

வாகன ஓட்டிகள் அதிக சப்தத்தை எழுப்பக் கூடிய ஏர்ஆரன் (காற்று ஒலிப்பான்) அதிகம் பயன்படுத்துவதால் எதிரே வரக்கூடிய வாகன ஓட்டுநர்களும், பாதசாரிகளும் திடீரென்று எழுப்பும் சப்தத்தால் நிலை தடுமாறி கீழே விழுந்து விபத்துக்குள்ளாகும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

நகர எல்லைக்குள் பயணிக்கும் பொதுமக்களில் வயோதிகர்கள், உடல்நிலை பாதிக்கப்பட்டவர்கள், இருதய நோயாளிகள், பள்ளிக் குழந்தைகள் ஆகியோர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் அதிக சப்தத்தால் காது கேளாமல் போகும் வாய்ப்பும் உள்ளதால் நகர எல்லைக்குள் நான்கு சக்கர மற்றும் கனரக வாகன ஓட்டிகள் பொது மக்களுடைய நலனுக்கு கேடு ஏற்படாத வண்ணம் மக்கள் நலன்கருதி இப்பிரச்சனைக்கு துறை சார்ந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றனர் சமூக ஆர்வலர்கள். நடவடிக்கை எடுப்பார்களா? என்று பொருத்திருந்து பாரப்போம்.

**– ஞானவேல்**



# கட்சிப் பணியில் தீவிரம் காட்டும் பாமக

தமிழக அரசியல் களத்தில் தற்போதைய நிலையில் பாமக கிங் மேக்கராக விஸ்வரூபமெடுத்து வருகிறது. பாமகவை பொறுத்தவரை எந்த அணியிலும் இணை யாமல் தனி செயல் திட்டத்துடன் இயங்கி வருகிறது. கடந்த காலங்களில் சொந்த வாக்கு வங்கியில் ஏற்பட்ட சரிவை சரி செய்வதிலும் அக்கட்சி தீவிரம் காட்டுகிறது. தற்போதைய சூழலில் பாமகவின் பக்கம் அரசியல் கட்சிகள் பார்வை திரும்பியுள்ளது. அண்மையில் நடிகர் ரஜினிகாந்தை வடமாவட்ட பிரமுகர் ஒருவர் சந்தித்து பேசினார்.

இச்சந்திப்பின் போது தம் மீதான பா.ம.க.வின் கோபம் குறித்து விரிவாக கேட்டி ருக்கிறார் ரஜினிகாந்த்.

ஆனால் ரஜினியை பற்றி யெல்லாம் பாமக இப்போது கவலையேபடுவதில்லை என சொல்லப்பட்டிருக் கிறது. விஜயகாந்த் பாணி யில் வட தமிழகத்தை ரஜினி குறிவைப்பதைத்தான் இச்சந்திப்பு வெளிப்படுத்தி யிருந்தது.

அதேபோல் பாஜகவும் பாமகவை குறிவைத்து வலைவீசி கொண்டிருக்கிறது. இந்த வலையில் பெரிய தலைகள் எதுவும் சிக்கவில்லை. இருந்தபோதும் சிக்கிய தலை களைவைத்துக் கொண்டு வட தமிழகத்தில் பிரமாண்ட கூட்டங்கள், மாநாடு நடத்து வதில் பாஜக மும்முரம் காட்டுகிறது.

தற்போது காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகளை வெளியேற்ற நினைக்கிறது திமுக. இந்த கட்சிகளுக்கு பதில் பாமகவை உள்ளே கொண்டு வருவதில் வடமாவட்ட திமுக தலைவர்கள் படுமும்முரமாக இருக்கின்றனராம்.

வடதமிழகம்தான் கடந்த தேர்தல்களில் திமுகவுக்கு கை கொடுத்தது. ஆகையால் பாமகவுடன் கை கோர்த்தால் காங்கிரஸ்-விடுதலை சிறுத்தைகள் வெற்றிடத்தை நிரப்புவது மட்டுமல்ல. கூடுதல் இடங்களும் கிடைக்கும் என கூறிவருகின்றனராம் வட தமிழக திமுக பிரமுகர்கள்.

இப்படி பிரதான கட்சிகள், புதிய கட்சிகள் அனைத்தும் பாமகவை நோக்கி நகருகின்றன. எனவே கடந்த காலங்களைப் போல, மீண்டும் வரும் தேர்தல் காலங்களில் பாமக கிங் மேக்கராக உருவெடுக்கிறது என்பதையே இவை அனைத்தும் வெளிப் படுத்துகின்றன.

**- தரணி**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446

# மரத்தை ஏன் வெட்டணும் மழைக்காக ஏன் வேண்டணும்

- கவிஞர் நிவேதிதா

போதி மரத்தடியில்
புத்தருக்கு
ஞானம் கிடைத்தது.

புளிய மரத்தடியில்
நம்மாழ்வார்க்கு
ஞானம் கிடைத்தது.

அரச மரத்தடியில்
திருமூலருக்கு
திருமந்திரம் கிடைத்தது.

இப்பொழுது
மரமும் இல்லை
மனிதமும் இல்லை.

இப்படியே போனால்
கடைசி மரமும் வெட்டுண்டு
கடைசி நதியும் விஷமேறி
கடைசி மீனும் பிடிபட
அப்பொழுது தான் உரைக்கும்,
பணத்தை சாப்பிட
முடியாதென்று...

அன்று வீட்டிற்கு ஒரு வீரன்
தேவை என்றார்கள்,
வீரர்களை வளர்த்தோம்.

இன்று வீட்டிற்கு ஒருவர்
மரம் வளர்ப்பீர் என்றார்கள்.

ஆனால் இன்று,
வீட்டிற்கு ஒருவர் மரத்தை
வெட்டிக் கொண்டிருக்கிறார்கள்!



கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. **A. MOURIYAN,**



மாணவ, மாணவிகளுக்கும், இளைய தலைமுறையினருக்கும் சிறந்த தற்காப்பு பயிற்சிகளை இலவசமாக பயிற்சி அளித்துவரும்
திருப்பூர் திரு. கே. அய்யப்பன் அவர்களைப் பாராட்டி,
புனிதர் பீரஸ் பீடியா யுனிவர்சிட்டியின் விருதாகி 'கௌரவ முனைவர் பட்டம்' வழங்கியுள்ளது.

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்

- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements
  and anything















No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33344, 63819 50149**